Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, AUGUST 2, 2021

திங்கட்கிழமை ஒகஸ்ட் 02, 2021 | ஒளி: 07 கதிர்: 63 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## "ரிஷாட்டின் இல்லம் எனக்கு வேண்டாம்"

### இரண்டு அறைகளுக்கும் சீல்



ரிஷாட் பதியுதீன், முன்னாள் வர்த்தக அமைச்சராக இருந்தபோது பயன்படுத்திய வாசஸ்தலத்தை, தற்போது பயன்படுத்தும் அமைச்சர் பந்துல குணவர்தன, அந்த வாசஸ்தலத்தை மீண்டும் கையளிப்பதற்கு தீர்மானித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## புலிக்குளத் திட்டப் பணிக்காக அமைச்சர் டக்ளஸுக்கு பாராட்டு



கிளிநொச்சி அறிவியல்நகர் யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்கு, புலிக்குளத்திலிருந்து நீரைப் பெறும் திட்டத்தைச் சாத்தியப்படுத்தியமைக்காக, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவுக்கு யாழ். பல்கலைக்கழக பேரவை நன்றி தெரிவித்துள்ளது.

துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராசா தலைமையில் நடைபெற்ற பல்கலைக்கழக பேரவைக் கூட்டத்தின்போதே, கடற்றொழில் அமைச்சரும்,

தொடர்ச்சி P2

# தடுப்பூசி கட்டாயம்

## சட்ட ஒழுங்குவிதிகள் தயாராகின்றன

கொரோனா வைரஸ் தொற்றுவதை கட்டுப்படுத்துவதற்காக செலுத்தப்படும் கொவிட்-19 தடுப்பூசியை, 30 வயதுக்கும் மேற்பட்ட சகல இலங்கை பிரஜைகளும் செலுத்திக்கொள்ளவேண்டும் என்பது கட்டாயமாக்கப்படவுள்ளது.

அவ்வாறு கட்டாயமாக்கும் வகையில், சட்ட ஒழுங்குவிதிகளைத் தயாரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்திவருகின்றது.

கொவிட்-19 தடுப்பூசியை செலுத்திக்கொள்ளாதவர் தொடர்பில் தேடியறிவதற்கு கிராம சேவகர் பிரிவுகள் மட்டத்தில் ஒரு கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்த கணக்கெடுப்பு நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுவதே அடிப்படை நடவடிக்கையாகும். அதுதொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

தடுப்பூசியை செலுத்திக்கொள்ளாதவர்கள் தொடர்பில், நாடளாவிய ரீதியில் கணக்கெடுப்பை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சுகாதார பிரிவுகளின் பிரதானிகளுக்கு அண்மையில் ஆலோசனை வழங்கியிருந்தார்.

இதுதொடர்பில், கொவிட்-19 தடுப்புச் செயலணியிலும் கடந்தவாரம் கலந்துரையாடப்பட்டது.

தொடர்ச்சி P2



## தனிவழி செல்லுமாறு மனோவுக்கு ஆலோசனை

### எல்லாக் கதவுகளின் சாவிகளும் கைகளில் இருக்கின்றன என்கிறார் மனோ

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நமது கட்சி, எமது மாவட்டத்தில் தனித்தே போட்டியிட வேண்டுமென களுத்துறை மாவட்ட ஜனநாயக மக்கள் முன்னணி செயற்குழு, கட்சி தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் எம். பிடம் வலியுறுத்தியுள்ளது.

தேர்தல் முறைமை பற்றிய பாராளுமன்ற தெரிவுக்குழுவில் நீங்கள் இருக்கிறீர்கள். சிறுபான்மையினருக்கு நியாயம் தரும் தேர்தல் முறைமைக்காக நீங்கள் போராடுவீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும் என்றும் அக்குழு மனோ கணேசனிடம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## எல்லைகள் திறக்கப்பட்டாலும் கடும் கட்டுப்பாடுகள் விதிப்பு

### தோப்புப் பாலம் வழியாக பயணிக்க அனுமதி மறுப்பு

எம்.இஸட்.ஷாஜஹான்

மே மாதம் 11ஆம் திகதி முதல், மாகாணங்களுக்கு இடையில் தடைசெய்யப்பட்டிருந்த பஸ், ரயில் போக்குவரத்துகள் நேற்று (01) முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும், பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவோர், சுகாதார வழிமுறைகளை கடுமையாக பின்பற்றவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கொரோனா தடுப்பூசியை ஏற்றிக்கொண்டமைக்கான அட்டையை வைத்திருப்போருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என தனியார் பஸ் போக்குவரத்து உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர்.



> "பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவோர், சுகாதார வழிமுறைகளை கடுமையாக பின்பற்ற வேண்டும். தடுப்பூசியை ஏற்றிக்கொண்ட அட்டையை வைத்திருப்போருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

தொடர்ச்சி P2

## உள்ளே



### செந்திலின் தலையீட்டால் மடுல்சீமைக்கு தீர்வு

முழுச் செய்தி P5

### இரண்டு திணைக்களங்கள்

## வீரசேகரவிடமிருந்து ஜனாதிபதி வசமானது

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனக்கு கீழ் மேலும் இரண்டு நிறுவனங்களை கொண்டுவந்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவின் கீழிருந்த இரண்டு திணைக்களங்களையே ஜனாதிபதி தனது அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்துள்ளார்.

சிவில் பாதுகாப்புத் திணைக்களம், பல்நோக்கு அபிவிருந்தி செயலணி திணைக்களம் ஆகிய இரண்டுமே

தொடர்ச்சி P2





# இது சத்தியம்



தமது தோட்டங்களைச் சேர்ந்த பிள்ளைகளை வீட்டு வேலைகளுக்காக அனுப்புவதில்லை என, கொட்டகலை யுனிப்பீல்ட் தோட்ட மக்கள் மெழுகுவர்த்தி சுடரின் முன்பாக சத்தியம் செய்தனர்.

டயகம சிறுமி ஹிசாலினிக்கு நீதிகோரி, நேற்று (01) கவனயீர்ப்பு பேரணி, ஹட்டன்- நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை யூனிப்பீல்ட் பகுதியில் நடைபெற்றது.

இந்தப் பகுதியை சேர்ந்த தோட்ட தொழிலாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஒட்டோ சாரதிகள், என சுமார் 300ற்கும் மேற்பட்டவர்கள் இதில் பங்கேற்றிருந்தனர்.

தொடர்ச்சி P2

## நாட்டை முழுமையாக சுற்றிவளைத்தது கொரோனா

நாடளாவிய ரீதியில் சகல மாவட்டங்களிலும் கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப்பிரிவு, அதுதொடர்பில் வரைபடம் ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

'கொரோனா வைரஸ் ஆபத்தான பகுதிகள்' எனத் தலைப்பிட்டு வெளியிடப்பட்டிருக்கும் அந்த வரைபடத்தின் பிரகாரம் , முழு நாட்டிலும் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் உள்ளனர்.

தொடர்ச்சி P2



## குற்றவாளிகள் தப்பிக்க பொலிஸார் துணையா?

### இராதா எம்.பி கேள்வி; ஆராய வேண்டும் என்கிறார்

டி.ஷங்கீதன்

தலவாக்கலை, டயகம சிறுமியின் விடயத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தப்பிப்பதற்கு பொலிஸாரும் துணைபோய் உள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. ஆகையால், இதுதொடர்பில் அரசாங்கமும் பாதுகாப்பு அமைச்சும் உரிய நடவடிக்கைளை எடுக்கவேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.

தொடர்ச்சி P2

## முல்லைத்தீவில் பால்மா தட்டுப்பாடு



முல்லைத்தீவு மாவட்டத்தில் வர்த்தக நிலையங்களில் பால்மா வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என நுகர்வோர் தெரிவித்துள்ளார்கள்.

தொடர்ச்சி P2

## உக்காத லஞ்ச் சீட் பாவனைக்குத் தடை



உக்காத பொலித்தீனால் தயாரிக்கப்படும் லஞ்ச் சீட் (Lunch Sheet) பாவனை நேற்று (01) முதல் தடை செய்யப்பட்டுள்ளது என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## 'மக்களை வெளியேற்ற அரசாங்கம் முயற்சி'



தங்களுக்கு சொந்தமான இடங்களில் இருந்து மக்களை வெளியேற்ற அரசாங்கம் முயற்சிப்பதாகத் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, பாரிய அளவிலான இடங்களை அரசாங்கத்துக்கு நெருங்கியவர்களுக்கு வழங்கி வருவதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், தான் அமைச்சராக இருந்தபோது, மக்களுக்கு 20 பேர்ச் காணியை வழங்கி அதில் அவர்கள் வீடுகளை

தொடர்ச்சி P2

## இன்று முதல் அரச துறை வழமைக்குத் திரும்புகிறது

அரச ஊழியர்கள் அனைவரும் இன்று (02) முதல் கடமைகளுக்கு திரும்பவும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அதிபர், ஆசிரியர்கள் அவ்வாறு கடமைக்குத் திரும்பவேண்டிய அவசியமில்லை என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகள் யாவும் மூடப்பட்டுள்ளமையால், ஆசிரியர்கள் பணிக்குத் திரும்ப வேண்டிய அவசியமில்லை. பாடசாலைகள் திறந்தவுடன் கடமைக்கு அழைக்கப்படுவார்கள்.

ஆகையால், அரச ஊழியர்களை பணிகளுக்கு அழைக்கும் சுற்றுநிரூபம் ஆசிரியர்கள்,

தொடர்ச்சி P2

## 'பயணம் இவ்வாறே நீடித்தால் ஐ.தே.கவின் நிலையே ஏற்படும்'

### அரசாங்கத்தை எச்சரிக்கிறார் இராஜாங்க அமைச்சர் விதுர

சேஹ்ன் செனவிரத்ன

அரசாங்கம் தற்போது பயணிப்பதைப் போன்று தொடர்ந்து பயணிக்குமானால், ஐக்கிய தேசிய கட்சிக்கு ஏற்பட்ட நிலையே அரசாங்கத்துக்கும் ஏற்படுமெனத் தெரிவித்த தேசிய பாரம்பரியம் மற்றும் கிராமிய கலைகள் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, மக்கள் எப்போதும் பொறுமையுடன் இருக்கமாட்டார்கள். நேரம் வரும் போது மக்கள் தீர்மானங்களை எடுப்பர் என்றார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# தடுப்பூசி கட்டாயம்

பல்வேறு காரணங்களால் சிலர், தடுப்பூசியை ஏற்றிக்கொள்வது தொடர்பில் அச்சத்துடனேயே இருக்கின்றனர் என சுகாதார தரப்பினர் எடுத்தியம்பியுள்ளனர்.

தடுப்பு ஊசியை குத்தும்போது தாங்கமுடியாத வலி ஏற்படும் என நினைப்போர், தங்களுக்கு நோயெதிர்ப்பு சக்தி ஆகக்கூடுதலாகவே இருக்கிறது என மிகைப்படுத்தி நினைக்கும் பிரிவினர், தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதன் ஊடாக எவ்விதமான பலன்களும் இல்லையென நினைப்போர். என மூன்று வகைகளாக, தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாதவர்களை பிரிக்காலம் என ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

"கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொடுப்பதற்கான சகல வசதிகளையும் அரசாங்கம் வழங்கியிருக்கின்றது. இந்நிலையில், நூற்றுக்கு ஒரு சதவீதத்துக்கும் குறைந்த எண்ணிக்கையிலானவர்களே, தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதில் இருந்து விலகிநிற்கின்றனர்" என்றார்.

## நாட்டை முழுமையாக சுற்றிவளைத்தது கொரோனா

ஜூலை 24ஆம் திகதியுடன் முடிவடைந்த 14 நாள்களில் தொடர்பிலான விபரங்களே அதில் உள்ளன.

மேல் மாகாணத்தில் ஆகக் கூடுதலான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கேகாலை, புத்தளம், மாத்றை, இரத்தினபுரி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் 100க்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் ஆகக்குறைந்த தொற்றாளர் இணங்காணப்பட்டுள்ளார். அங்கு ஒரேயொருவருக்கே கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில், மேல் மாகாணத்தை பொறுத்தவரையில் களுத்துறை மாவட்டத்தில் 389 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 441 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர். கொழும்பில் 119 பேர் இணங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாவட்டங்களின் பிரகாரம், யாழ்ப்பாணத்தில் 58 பேரும், நுவரெலியாவில் 46 பேரும் பதுளையில் 91 பேரும் மட்டக்களப்பில் 58 பேரும் திருகோணமலையில் 23 பேரும், வவுனியாவில் அறுவரும் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் அந்த புள்ளிவிவரத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனிவழி செல்லுமாறு மனோவுக்கு ஆலோசனை

கொழும்பு தெற்கு பாமன்கடை அலுவலகத்தில், களுத்துறை மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட அமைப்பாளர் மரியதாசன் அன்டனி ஜெயசீலன் ஏற்பாட்டில் நேற்று (01) நடைபெற்றது.

இக்கூட்டத்தின் போது, களுத்துறை மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், தேர்தல் முறைமை எதுவாக இருந்தாலும், எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில், நமது கட்சி களுத்துறை மாவட்டத்தில் ஏணி சின்னத்தில் தனித்தே போட்டியிட வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். களுத்துறை மாவட்ட பிரதேச சபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி சபைகளில் எமக்குரிய பிரதிநிதித்துவங்களை பெறுவதற்கு தனித்து போட்டியிடுவதே சரியான வழி என மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஐக்கிய மக்கள் கூட்டணியில் இருக்கின்ற பிரதான சிறுபான்மை கட்சி என்ற முறையில் நாம் தேர்தலில் போட்டியிடும் முறைமை தொடர்பில் உரிய வேளையில் உரிய முடிவை தமிழ் முற்போக்கு கூட்டணியாக எடுப்போம். நாம் சேர்ந்தும் போட்டியிடலாம். தனித்தும் போட்டியிடலாம். எல்லா கதவு சாவிகளையும் கையில் வைத்திருப்போம். உரிய வேளையில் உரிய கதவை திறப்போம். எவருக்கும் வாக்குகளை பெற்றுக்கொடுத்து விட்டு வெளியிலே சும்மா நிற்கும் வாக்கு வங்கியாக நாம் இனி இருக்க மாட்டோம். எமது மக்களின் நியாயமான பிரதிநிதித்துவங்களை பெறுவதே எமது நோக்கமாகும், என கட்சி தலைவர் மனோ கணேசன் எம்.பி பதில் அளித்தார்.

## எல்லைகள் திறக்கப்பட்டாலும் கடும் கட்டுப்பாடுகள் விதிப்பு

தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாதவர்களிடம், இரண்டு மடங்கு பயணக்கட்டணம் அறவிப்படும் என்றும் அறிவித்துள்ளனர். எனினும், இவ்விரண்டு முறைமைகளையும் நடைமுறைப்படுத்துமாறு உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"இந்நிலையில், ஏனைய மாகாணங்களில் இருந்து மேல் மாகாணத்துக்கு ரயில் பயணங்கள் 110 இன்று (02) நடத்தப்படும்" என ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கண்டியிலிருந்து கொழும்பு கோட்டையை நோக்கி, இரண்டு ரயில்கள் சேவைகளில் ஈடுபடுத்தப்படும். ஏனைய ரயில் பாதைகளிலும் இவ்வாறே ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும். 110 ரயில் பயணங்களில் வெளிமாவட்டங்களில் இருந்து கொழும்பு நோக்கி 55 ரயில் பயணங்களும், கொழும்பிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு 55 ரயில் பயணங்களும் நடத்தப்படும் என்றும் ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

"பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவோர், சுகாதார வழிமுறைகளை கடுமையாக பின்பற்றவேண்டும்" என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை நேற்று (01) முதல் நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து மேல் மாகாணத்தில் ஒரு வாயில் எல்லையாக அமைந்துள்ள நீர்கொழும்பு கொச்சிக்கடை தோப்புப் பாலம் வழியாக வெளிமாகாணங்களைச் சேர்ந்த வாகனங்கள் மேல் மாகாணத்திற்குள் உட்பிரவேசித்தன.

அதேபோன்று அந்த பாலம் வழியாக பெரும்பாலான வாகனங்கள் மேல் மாகாணத்திலிருந்து வடமேல் மாகாணம் வழியாக வெளிச் செல்வதை காணமுடிந்தது.

இந்த நிலையில் மேல் மாகாணத்திற்குள் பொலிஸ் அனுமதிப் பத்திரம் இன்றி பிரவேசிக்க முயன்ற தனியார் மற்றும் அரச பஸ் வண்டிகள் திருப்பி அனுப்பப்பட்டன.

**தாங்கள் வந்த பஸ்ஸில் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதை காண முடிந்தது. இன்னும் சிலர் பஸ்களிலில் இருந்து இறங்கி நடை பயணமாக தோப்புப் பாலம் வழியாகச் சென்று கொச்சிக்கடையிலிருந்து தமது பயணத்தை தொடர்வதற்கு செல்வதையும் அவதானிக்க முடிந்தது.**

"அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் வாகனங்கள் மாத்திரமே உட்பிரவேசிக்க அனுமதிக்கப்படுவதாகவும் இன்றைய தினம் பஸ் வண்டிகள் மாகாணத்திற்குள் நுழைவதற்கான அனுமதியை தமது உயர் அதிகாரிகள் இதுவரையில் தமது வழங்கவில்லை" எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் காரணமாக பஸ்களில் வந்த பயணிகள், தாங்கள் வந்த பஸ்ஸில் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதை காண முடிந்தது. இன்னும் சிலர் பஸ்களிலில் இருந்து இறங்கி நடை பயணமாக தோப்புப் பாலம் வழியாகச் சென்று கொச்சிக்கடையிலிருந்து தமது பயணத்தை தொடர்வதற்கு செல்வதையும் அவதானிக்க முடிந்தது.

## 'பயணம் இவ்வாறே நீடித்தால் ஐ.தே.கவின் நிலையே ஏற்படும்'

எமது நாட்டின் பெரும்பான்மையான மக்கள் "ஒரே நாடு -ஒரே சட்டம்" என்பதுக்காகவே கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக தெரிவு செய்தார்கள் என தெரிவித்த அவர், ஆனால், இப்போது நாம் சிறிய சந்தேகத்தை உணர்கின்றோம். பிணைமுறி விவகார கொள்ளையர்களைப் பிடித்தார்களா? உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியைப் பிடித்தார்களா? என வினவினார்.

போகம்பறை சிறைச்சாலைக்கு கண்காணிப்பு விஜயமொன்றை நேற்று முன்தினம் (31) மேற்கொண்டிருந்த அவர், அங்கிருந்து திரும்பியதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சேதனைப் பசளை என்பது சிறந்த எண்ணக்கரு தான். ஆனால் துரதிஷ்வசமாக ஒரே நேரத்தில் அதனை செய்ய முடியாது. அதற்கென கால எல்லை அவசியம். மண் மற்றும் கன்றுகள் உயிருள்ளவை. அதனால் தான் அதற்காக விசேட கவனம் செலுத்தப்படுகின்றது" என்றார்.

இலங்கையின் மண்ணும் கன்றுகளும் 40 வருடாக இரசாயன உரத்துக்கு பழகிவிட்டன எனத் தெரிவித்த அவர், எனவே, அது குறித்து சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை ஒரு இரவில் செய்து விடமுடியாது. அதை செய்வதற்கு முறையொன்று உள்ளது என்றார்.

## இது சத்தியம்

சட்டத்தரணி நேரு கருணாகரன் தெளிவூட்டல்களை வழங்கினார். அத்துடன், கீழ் கண்ட மூன்று கோரிக்கைகளும் தமது பிரதேசத்தில் உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என சட்டத்தரணி நேரு கருணாகரன் தெரிவித்தார்.

1. தமது பிரதேசத்தில் இருந்து 18வயதுக்கு குறைந்தவர்கள் தொழிலுக்கு சென்றிருந்தால் அவர்களை சட்டரீதியாக உடனடியாக திருப்பி அழைப்பது.
2. 18 வயதுக்கு குறைந்தவர்கள் பாடசாலைகளில் இருந்து இடை விலகி இருந்தால் அவர்களை மீள பாடசாலையில் சேர்த்து கல்விக் கற்க வழி செய்வது. அல்லது தொழில் முறை கல்வியை பெற்றுக் கொடுப்பது.
3. எமது பிரதேசத்தில் சிறுவர்கள் துன்புறுத்தப்படுவார்களாக இருந்தால் அது தொடர்பாக உடனடியாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குத் தெரியப்படுத்துவது.

இதற்கும் அங்கிருந்தவர்கள் முழுமையான சம்மதத்தை தெரிவித்தனர்.

## முல்லைத்தீவில் பால்மா தட்டுப்பாடு

த்தின் நகரங்களிலுள்ள முக்கிய வணிக நிலையங்கள் உள்ளிட்ட ஏனைய வணிக நிலையங்களிலும் பால்மா வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

மக்களின் நாளாந்த தேவைகளில் ஒன்றாகவும், சிறுவர்களுக்கான உணவாகவும் காணப்படும் பால்மா வகைகளை கொள்வனவு செய்ய சென்றால், "மா பெட்டி இல்லை" என கையை விரித்துவிடுகின்றனர் என நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் வணிகர்கள் சிலரிடம் கேட்டபோது, பால்மா வகையை இறக்குமதி செய்யும் நிறுவனங்களில் ஒன்று, பால்மா இறக்குமதியை குறைத்துள்ளது. இதனால் இந்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது" என்றனர்.

## உக்காத லஞ்ச் சீட் பாவனைக்கு தடை

தடையைப் பொருட்படுத்தாது செயற்படுவோர் தொடர்பில் கண்டறிவதற்கான சுற்றிவளைப்பு இன்று (02) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## ரிஷாட்டின் இல்லம் எனக்கு வேண்டாம்'

கொழும்பு-7, மெகென்சி வீதி, 37ஆம் இலக்க இல்லத்தையே ரிசாட் பயன்படுத்தினார். அதனை வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தற்போது பயன்படுத்துகின்றார். அந்த இல்லத்தையே அமைச்சர் பந்துல குணவர்தன கையளிப்பதற்கு தீர்மானித்துள்ளார் என அவரது ஊடகப் பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் தொடக்கம், ,தற்போதைய வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு அந்த இல்லத்தை கையளிக்க பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

ஆனால், குறித்த இல்லத்தில், தற்போது சர்ச்சையை தோற்றுவித்துள்ள பல சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக சந்தேகங்கள் வெளிவரம் நிலையில், குறித்த இல்லத்தின் இரண்டு அறைகள் பொலிஸாரால் சீல் வைத்து மூடப்பட்டுள்ளன.

இந்த நிலையில், குறித்த இல்லைத்தை புனரமைப்பு செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள 12 மில்லின் ரூபாய் பணத்தை செலவு செய்ய, தான் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று தெரிவித்துள்ள அமைச்சர் பந்துல குணவர்தன, வறுமை நிலையிலுள்ள சிறுமிகள் குறித்த வீட்டுக்குள் வைத்து துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் பாரதூரமானது என்றார்.

குறித்த உத்தியோகப்பூர்வ இல்லத்தை மீண்டும் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிடம் உத்தியோகப்பூர்வமாக கையளிக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளர் பத்ராணி ஜயவர்தனவுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்றும் அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று முதல் அரச துறை வழமைக்குத் திரும்புகிறது

அதிபர்களுக்கு பொருந்தாது என்றும் கல்வியமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த சுற்றுநிரூபத்தின் பிரகாரம், வீட்டிலிருந்து வேலை எனும் முறைமை, இன்று (02) முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தனியார் துறை தொடர்பில், அந்த நிறுவனங்களின் பிரதானிகள் தீர்மானிக்கவேண்டும். என்றும், ஏற்கெனவே விடுக்கப்பட்ட சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி, நிறுவனங்களை கொண்டு நடத்தவேண்டும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

## குற்றவாளிகள் தப்பிக்க பொலிஸார் துணையா?

பியுமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் கோரிக்கை விடுத்தார்.

இராதாகிருஸ்ணன் எம்.பி, தனது 69ஆவது பிறந்த நாளை, நேற்று (01) கொண்டாடினார். பிறந்த நாளையொட்டி, ம.ம.முவின் ஹட்டன் காரியாலயத்தில் சிறிய வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்பின்னர், அங்கு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இவ்வாறான சம்பவங்களால் இதற்கு முன்னரும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பாக அறிக்கையை, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பெற்று, அவ்வறிக்கையின் பிரகாரம் ஆராய்ந்து பார்க்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது" என்றார்.

முன்னறிவித்தல் விடுத்ததன் பின்னர், வீடுகளில் பணியாற்றும் சிறுவர்களை பொலிஸார் கடந்தவாரத்தில் தேடியிருந்தனர். இது குற்றவாளிகளை பாதுகாக்கும் செயற்பாடாகவே தான் கருதுகின்றேன் என்றத் தெரிவித்த இராதாகிருஸ்ணன் எம்.பி, முன்னறிவித்தல் இன்றி சென்றால் மட்டுமே, குற்றவாளிகளை கைது செய்யமுடியும். முன்னறிவித்தலுடன் சென்றமை, கண்துடைப்பான ஒரு செயலாகும் என்றார்.

பாடசாலையைவிட்டு இடை விலகும் மாணவர்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படுமாயின் சிறுவர்களுக்கு எதிரான இவ்வாறான துன்புறுத்தல்களை கட்டுப்படுத்தலாம் எனத் தெரிவித்த அவர், தங்களுடைய பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது தொடர்பில், பெற்றோர்களுக்கு பாரிய பொறுப்பு இருக்கின்றது என்றார்.

தனது கணவன், குடிபோதைக்கு அடிமையாவது தொடர்பில், பெருந்தோட்ட பெண்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். குற்றங்கள் அதிகரிப்பதற்கு, மதுபான சாலைகளிலும் நிரம்பி வலியும் கூட்டமும் முக்கிய காரணமாகிறது என்றார்.

**இந்த நிலைமை எங்களுடைய முற்போக்கு கூட்டணியிலும் அனைவருக்கும் இருக்கின்றது எனத் தெரிவித்த இராதாகிருஸ்ணன் எம்.பி, யாரும் மதுபான விற்பனையிலோ அல்லது அது தொடர்பான செயற்பாடுகளிலோ ஈடுபடுபவர்கள் நாங்கள் அல்லர்**

"மலையகத்தின் நீண்ட கால அரசியல்வாதியாக நான் இருக்கின்றேன். ஆனால், எனக்கும் மதுபான விற்பனைக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. எனவே, நான் இந்த விடயம் தொடர்பாக துணிவுடன் நேர்மையாகவும் பேச முடியும்" என்றார். இந்த நிலைமை எங்களுடைய முற்போக்கு கூட்டணியிலும் அனைவருக்கும் இருக்கின்றது எனத் தெரிவித்த இராதாகிருஸ்ணன் எம்.பி, யாரும் மதுபான விற்பனையிலோ அல்லது அது தொடர்பான செயற்பாடுகளிலோ ஈடுபடுபவர்கள் நாங்கள் அல்லர் என்றார்.

## புலிக்குளத் திட்டப் பணிக்காக அமைச்சர் டக்ளஸ்க்கு பாராட்டு

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவிற்கு இவ்வாறு நன்றி தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக 2013ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்துக்கு அறிவியல்நகர் பகுதியில் 568 ஏக்கர் காணியைப் பெற்றுத்தந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பின்னர், பல்கலைக்கழக வளாகத்துக்கு நீரைப் பெற்றுக்கொடுப்பதற்காக, பல்கலைக்கழகத்துக்குப் பின்புறமாக இருக்கும் புலிக்குளத்தைப் புனரமைத்து, அங்கிருந்து வாய்க்கால் மூலம் நீரைக் கொண்டுவரும் திட்டத்தை சாத்தியப்படுத்த ஏற்பாடு செய்திருந்தார்.

## வீரசேகரவிடமிருந்து ஜனாதிபதி வசமானது

இவ்வாறு ஜனாதிபதியின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது என அறிவித்துள்ள ஜனாதிபதி செயலகம். இதுதொடர்பில் விசேட வர்த்தமானி அறிவித்தலும் வெளியாகியுள்ளது என்றார்.

பொலிஸ் துறையில் ஆகக்கூடுதலான அர்ப்பணிப்பை செய்வதற்கு அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு இடமளிக்கும் வகையிலேயே இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## 'மக்களை வெளியேற்ற அரசாங்கம் முயற்சி'

நிர்மாணித்துக்கொள்வதற்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்தேன் என்றார். எனினும் தற்போதைய அரசாங்கம் இலங்கை மக்களின் இடங்களை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்து வருகின்றது, மக்களை இந்த இடங்களில் இருந்து வெளியேற்றி யாருக்கு இடங்களை வழங்கப்போகிறீர்கள் எனவும் அவர் இதன்போது வினவினார்.

அரசாங்கத்துக்கு நெருங்கிய நண்பர்களுக்கே இவ்வாறு பாரிய அளவிலான இடங்களை அரசாங்கம் வழங்கி வருவதாகவும் தெரிவித்தார்.

டயகம சிறுமி விவகாரம்:

# சிறுமியின் மரண வாக்குமூலமே சாட்சி

தனிநபர்களின் தேவைகளுக்காகவே டயகம சிறுமியின் உடல் தோண்டி எடுத்து மரண பரிசோதனை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்த சிரேஷ்ட சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க, சிறுமி உயிரிழப்பதற்கு முன்பாக, மரண வாக்குமூலமொன்றை வழங்கியுள்ளார். அதுவே சாட்சி எனவும் சிரேஷ்ட சட்டத்தரணி தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த சிரேஷ்ட சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க, ரிஷாட் பதியூதினின் வீட்டில் பணிபுரிந்த சிறுமி தீப்பற்றிய நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது, வைத்தியர்களிடம் தானே தனக்கு தீயை வைத்துக்கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

இதுவே சிறுமியின் மரண வாக்கு மூலம். இந்த வாக்கு மூலமே சாட்சியாகக் கருதப்படும். இதனைவிடுத்து, மீண்டும் மீண்டும் மரண பரிசோதனைகளை மேற்கொள்வது அர்த்தமற்றது.

தனக்குத் தானே தீ வைத்துக்கொண்டார் என்றால், அது தற்கொலையாகவே கருதப்படும். இதனை விடுத்து அவரின் உடலை மீண்டும் மீண்டும் தோண்டி எடுத்து மரண பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவது, தனிநபர்களின் தேவைகளுக்காகவே எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, உயிரிழந்த நபருக்கு இழைக்கப்பட்ட பாலியல் துஷ்பிரயோகத்துக்கு எதிராக வழக்கு தொடர முடியாது எனவும் சிரேஷ்ட சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க தெரிவித்தார்.



மரண வாக்குமூலத்தை வைத்து

## குற்றவாளிகளை நிரபராதிகளாக்க முடியாது



மரண வாக்கு மூலமொன்றை மாத்திரம் வைத்து, குற்றவாளிகளை, நிரபராதிகளாக்க முடியாதென பேராசிரியர் சட்டத்தரணி பிரதீபா மாஹநாமஹேவா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் கருத்துதெரிவித்த பேராசிரியர் சட்டத்தரணி பிரதீபா மாஹநாமஹேவா, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டிருந்தால், டி.என்.ஏ பரிசோதனைகளை மேற்கொண்டு, அதுதொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள முடியும்.

இந்தியாவில் வைத்திய பீட மாணவி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

எவரும் தற்கொலை செய்துகொண்டால், தற்கொலைக்குத் தூண்டுபவர்கள், அதற்கு உதவுபவர்கள் அனைவருக்கு எதிராகவும் தண்டனைக் கோவை சட்டத்தின் கீழ் தண்டனைகளைப் பெற்றுக்கொடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

## "ரிஷாட்டை இணைத்தால் நான் வெளியேறுவேன்"

### இராஜாங்க அமைச்சர் ஜானக எச்சரிக்கை

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்



முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், தற்போதைய அரசாங்கத்தில் இணைக்கப்பட்டால், நான் இந்த அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவேன் என ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நேற்று முன்தினம்(31) நடைபெற்ற நிகழ்வான்றின் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர, பல்வேறு விமர்சனங்கள், குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகி இருக்கின்ற ரிஷாட் பதியுதீனை, எமது அரசாங்கம் ஒரு போதும் இணைத்து கொள்ளாது. அவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்டால் இந்த அரசாங்கத்திலிருந்து நான் வெளியேறுவேன் என்றார்.

எனினும் அவ்வாறான நோக்கமெதுவும் அரசாங்கத்துக்கு இல்லை எனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர, அவரை அரசாங்கத்தில் இணைத்துக் கொள்ள ஜனாதிபதியோ, பிரதமரோ ஒரு போதும் தீர்மானிக்க மாட்டார்கள் என்றார்.

## எம்.பிக்களின் கல்வி தகைமைகளை வெளியிடுங்கள்

பாராளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகமைகளை பாராளுமன்றில் சமர்ப்பித்ததன் பின்னர்,அவற்றை வெளிப்படுத்த வேண்டுமெனத் தகவலறியும் ஆணைக்குழு பாராளுமன்ற அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

எனினும் இதுவரையில் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் தங்களது கல்வித் தகைமைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை எனவும் அந்த ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தகவலறியும் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யப்பட்ட தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழான விண்ணப்பம் ஒன்றின் மீதான விசாரணையின்போது, அந்த ஆணைக்குழு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இதுவேளை, இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள பாராளுமன்றத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர், பாராளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகைமைகளைக் கட்டாயம் பாராளுமன்றத்துக்கு வழங்க வேண்டும் என்பது இல்லை என்பதால், இந்தத் தகவல்கள் பாராளுமன்றில் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.



மேல் மாகாணத்தில்

## அஸ்ட்ரா செனெகாவின் இரண்டாவது டோஸ்




அஸ்ட்ரா செனெகாவின் இரண்டாவது டோஸை விரைவாக செலுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ள நிலையில், இராணுவம், சுகாதார அதிகாரிகளால் நிர்வகிக்கப்படும் தடுப்பூசி மையங்களூடாக நேற்று (01) முதல் மேல் மாகாணத்தில் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டது.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்தில், அஸ்ட்ராசெனிக்காவின் இரண்டாவது டோஸ் நாராஹேன்பிட்டி, வெரஹேர ஆகிய இடங்களில் உள்ள இராணுவ வைத்தியசாலைகளிலும், பனாங்கொட இராணுவ முகாமிலும் செலுத்தப்படுகிறது. நாளை (3) வரையில் இரண்டாவது டோஸைப் பெற்றுக்கொள்ள முடியும்.

18 வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் இரண்டாது டோஸைப் பெற்றுக்கொள்ள முடியுமென இராணுவ வைத்தியசாலையின் தடுப்பு மருத்துவம், மனநல சுகாதார சேவை பணியகத்தின் பிரதி பணிப்பாளர் வைத்திய நிபுணரான கேர்ணல் டொக்டர் சவீன் கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் எட்டு இடங்களில் உள்ள 13 வைத்தியசாலைகளிலும் களுத்துறையில் 5 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் கம்பஹாவில் 15 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் இவ்வாறு தடுப்பூசிகள் செலுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## மர்ஜான் எம்.பி ஈரான் விஜயம்



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நாளை மறுதினம் 04ஆம் திகதி ஈரான் பயணமாகின்றார்.

> **ஈரானின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள இப்ராஹிமின் பதவியேற்பு வைபவத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரதிநிதியாக கலந்துகொள்கிறார்**

ஈரானின் புதிய ஜனாதிபதியாக 05 ஆம் திகதி பதவியேற்கவுள்ள இப்ராஹிம் றஈஸியின் பதவியேற்பு வைபவத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரதிநிதியாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் கலந்து கொள்ளவுள்ளார்.

மூன்று தினங்கள் ஈரானில் தங்கியிருக்கும் அவர், ஈரான் அரச தரப்பு முக்கியஸ்தர்களையும் சந்தித்து இருதரப்பு உறவுகள் தொடர்பான முக்கிய பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 'சரியான உத்திகள் இல்லை'

கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்திடம் தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள சரியான உத்திகள் இல்லை என்று கூறியுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, பணத்தை அச்சிடுதல், கடன் பெறுதல் மற்றும் அரசு சொத்துக்களை விற்பனை செய்வது போன்ற தோல்வியுற்ற மற்றும் காலாவதியான உத்திகளை அரசாங்கம் பின்பற்றுகிறது என்று கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று (01) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

நாடு அபிவிருத்தியடையும் என்ற நம்பிக்கையுடன் இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்த மக்கள், ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு ஏமாற்றமும் விரக்தியுமடைந்து அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய நிர்பந்திக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டார். ராஜபக்ஷ ஆட்சியானது, குறுகிய காலத்துக்குள் மக்களின் அவமதிப்புக்கும் எதிர்ப்புக்கும் உள்ளாகியுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

"இது ஜனாதிபதியின் தனிப்பட்ட குறைபாடு காரணமாக மட்டும் அல்ல. இது நீண்ட காலமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் கொள்கையின் விளைவாகும். என்றும் கூறினார்.

PTA சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட

## நால்வர் விடுதலை



நீண்ட நாள்களாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் கைதிகள் நால்வரை, வவுனியா மேல் நீதிமன்றம் நிரபராதிகளெனத் தீர்ப்பளித்து விடுதலை செய்துள்ளது.

இதுதொடர்பில் அறிக்கை ஒன்றை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அரசியல் கைதிகள் தொடர்பில் போராடிவரும் 'குரலற்றவர்களின் குரல் அமைப்பு', அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நடேசன் தருமராசா, வவுனியாவைச் சேர்ந்த ஜோசப் செபஸ்ரியான், கிளிநொச்சியைச் சேர்ந்த நடராசா சர்வேஸ்வரன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்ணதாசன் ஆகியோரே மேற்படி விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் நடேசன் தருமராசா, தனது ஒருவருட புனர்வாழ்வை முடித்து இயல்பு வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த சமயம், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடந்த 2013 ஆம் ஆண்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

அவருடன் ஜோசப் செபஸ்ரியான் என்பவரும் கைது செய்யப்பட்டு இருவருக்கும் கடந்த 2018 ஆம் ஆண்டு வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணைகளின் அடிப்படையில் அவர்கள் வவுனியா மேல் நீதிமன்றத்தால் நிரபராதிகள் என இனங்காணப்ப ட்டதையடுத்து எட்டு வருடங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

> **யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நடேசன் தருமராசா, வவுனியாவைச் சேர்ந்த ஜோசப் செபஸ்ரியான், கிளிநொச்சியைச் சேர்ந்த நடராசா சர்வேஸ்வரன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்ணதாசன் ஆகியோர் விடுதலை**

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், கடந்த 2016ஆம் ஆண்டு நடராசா சர்வேஸ்வரன் கைது செய்யப்பட்டார். இவருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றில் கடந்த 2018ஆம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு விசாரணைகளின் அடிப்படையில் நிரபராதியென இனங்காணப்பட்டு நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபட்டார் என்ற குற்றத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் நுண்கலைத் துறை விரிவுரையாளர் கண்ணதாசனும் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

## மு.சோ.கவும் சு.கவும் சந்தித்துப் பேச்சு

முன்னிலை சோசலிச கட்சிக்கும் (மு.சோ.க) ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கும் (சு.க) இடையில் நேற்று (1) முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்திப்பொன்று நடைபெற்றது என முன்னிலை சோசலிச கட்சியின் உறுப்பினர் பிரசார செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னிலை சோசலிச கட்சி சார்பில் தானும் சமீர கொஸ்வத்த, ரவீந்ர முதலிகே உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டதாகத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் உரப் பிரச்சினை, கொத்தாலவல சட்டம், இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பூகோள ரீதியான பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது என்றார்.

நாட்டில், தற்போதைய அரசியல் நிலைமை, மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் அதற்கான தீர்வு என்பவை குறித்து, அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாட தீர்மானம் எடுத்துள்ள நிலையில், இலங்கை சமசமாஜக் கட்சி, கம்யூனிசக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி என்பற்றுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன், எதிர்வரும் நாள்களில் மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்பவற்றுடன் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அதற்கமைய, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியுடனான சந்திப்பு பலனுடையதாக அமைந்ததாகவும் கட்சி என்ற ரீதியில் இரு கட்சிகளுக்கும் இடையில், கொள்கை ரீதியில் வேறுபாடுகள் இருந்தாலும் நாட்டு மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் என்பவற்றில் சில ஒற்றுமையான நிலைப்பாடுகள் உள்ளன என்றார்.

மேலும், கொத்தலாவல சட்டம் 6ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள நிலையில், அது குறித்து ஆராய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி குழுவொன்றை நியமித்துள்ளதாகவும் அக்குழுவின் அறிக்கை இன்று (2) கையளிக்கப்படவுள்ளது என்றும் அந்த அறிக்கைக்கமைய அவர்களது நிலைப்பாடு அறிவிக்கப்படும் என மைத்திரிபால சிறிசேன கலந்துரையாடலில் தெரிவித்த்தாகவும் புபுது ஜயகொட தெரிவித்தார்.



ஆறு வருடங்களுக்குப் பின்னர்

## ரஷ்யாவிலிருந்து விமானம் வந்தது

ஆறு வருடங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான விமான சேவைகள், மீண்டும் நேற்று (01) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தப்பட்டிருந்த இலங்கை - ரஷ்ய விமான சேவை, இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு உதவும் வகையில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விமான சேவைக்கு சொந்தமான விமானம், 51 உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக்கொண்டு, மொஸ்கோ நகரத்திலிருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்று வந்தடைந்தது.



மூன்று மாதங்களுக்குப் பின்னர்

# மத்தியஸ்த சபைகள் வழமைக்குத் திரும்பின

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்



கடந்த மூன்று மாதங்களுக்கு பின்னர் நேற்று (01) மத்தியஸ்த சபைகளின் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் காத்தான்குடி மத்தியஸ்த சபை தலைவர் எம்.ஐ. உசனார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு மத்தியஸ்த சபைக்கு வருபவர்களுக்கு, உடல் வெப்பம் பரிசோதிக்கப்படுவதுடன், அவர்களின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பனவும் பதிவு செய்யப்படும். மேலும் தொடர்ச்சியாக ஞாயிற்றுக்கிழமை தோறும் மத்தியஸ்த சபை நடவடிக்கைகள் இடம் பெறும். எனவே மத்தியஸ்த்த சபைக்கு வருகைதருவோர் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடந்து கொள்ள வேண்டும்" என்றார்.

மலையகச் சிறுமிக்கு நீதிகோரி

## மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

`முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிப்பெண்ணாகக் கடமையாற்றிய போது, உயிரிழந்த சிறுமி ஹிஷாலினிக்கு நீதி வேண்டும்`எனக்கோரி, மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக நேற்று முன்தினம் (31) ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ்வார்ப்பாட்டத்தில் குறித்த சிறுமியின் மரணத்துக்கான நீதி கண்டறியப்பட வேண்டும், குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டறிந்து தண்டனை வழங்க வேண்டும், சிறுமிகளை வேலைக்கு அமர்த்துவதைத் தவிர்க்க வேண்டும், வயது குறைந்தவர்களை வேலைக்கு அமர்த்துவது தடை செய்யப்படவேண்டும், சிறுவர்களுக்கான ஒரு நீதிமன்ற பொறிமுறையை அரசாங்கம் வகுக்க வேண்டும் போன்ற பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் முக்கியஸ்தர்கள் உட்பட உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டு சிறுமியின் குடும்பத்திற்கு நீதி கிடைக்க வேண்டுமென பல்வேறுபட்ட வாசகங்களை தாங்கியவாறு கோசங்கள் எழுப்பியவண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






## வீட்டில் சடலமாக மீட்கப்பட்ட சிறுவன்

■ ரீ.எல்.ஜவ்பர்கான் , எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள காங்கேயனோடையில் மூன்று வயது சிறுவனொருவன் தனது வீட்டிலிருந்து நேற்று முன்தினம் (31) சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

குறித்த சிறுவனின் தாய் குளித்து விட்டு, வீட்டில் வந்து பார்த்தபோது சிறுவன் உறங்கிய நிலையில் இருந்ததாகவும், சிறுவனுக்கு மேல் வீட்டிலுள்ள மேசை மின்விசிறி ஒன்று விழுந்து கிடப்பதைக் கண்டதாகவும், சிறுவனை எழுப்பிய போது சிறுவன் எழும்பாத நிலையில் அயலவர்களின் உதவியுடன் சிறுவனை ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றதாகவும் எனினும் சிறுவன் உயிரிழந்து விட்டான் என்று வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் அச்சிறுவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்திருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுவனின் சடலம் ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

மட்டக்களப்பிலிருந்து தூர இடங்களுக்கான

## போக்குவரத்து மீண்டும் ஆரம்பம்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை நீக்கப்பட்டதையடுத்து, கிழக்கு மாகாணத்திலிருந்து தூர இடங்களுக்கு இடையிலான போக்குவரத்து சேவைகள் நேற்றைய தினம் (01) ஆரம்பமாகின.

அந்தவகையில் மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து நேற்றுக் காலை யாழ்ப்பாணம், பதுளை, மன்னார், கொழும்பு ஆகிய இடங்களுக்கான பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை மட்டக்களப்பு டிப்போ முகாமையாளர் தெரிவித்தார்.

மேலும் பயணிகள் அனைவரும் கொரோனா சுகாதார நடை முறைகளைப் பின்பற்றி பயணத்தை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





## பள்ளிவாசல்கள் சம்மேளனம் பாராட்டு

■ நூருல் ஹுதா உமர்

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டதுடன் தடுப்பூசியைப் பெறுவதிலும் முன்னின்ற கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ ஆர் எம் தௌபீகின் சேவையைப் பாராட்டி, அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாசல் சம்மேளனத்தால் நினைவுச் சின்னமொன்று வழங்கப்பட்டது.

> **கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டதுடன் தடுப்பூசியைப் பெறுவதிலும் முன்னின்ற கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ ஆர் எம் தௌபீகின் சேவையைப் பாராட்டி, நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது**

கடந்த 30 ஆம் திகதி, நிந்தவூர் ஜும்மா பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் குறித்த சம்மேளனத்தின் தலைவர் டொக்டர் ஏ.ஆர் அப்துல் அஸீஸ், செயலாளர் ஏ.எல். அன்வர்டீன், பொருளாளர் எஸ்.எம். சபீஸ், நிந்தவூர் தொற்றா நோய் ஆராய்ச்சி வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் கே. எல் நக்பர் உட்பட ஜமியத்துல் உலமா சபையினர், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



தாழ்வுப்பாடு கிராமம்

# முடக்கப்படும்?

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தாழ்வுப்பாடு கிராமத்தில், நேற்றுமுன் தினம் சனிக்கிழமை, 35 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், தாழ்வுபாடு கிராமத்தின் MN/70 கிராம அலுவலர் பிரிவை தற்காலிகமாக தனிமைப்படுத்தும் வகையில், கொழும்பு கொவிட்-19 தடுப்பு செயலணியிடம் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளதாக, மன்னார் மாவட்ட தொற்று நோய் விஞ்ஞான பிரிவுக்கான வைத்திய அதிகாரி வைத்தியர் கே.சுதாகரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில், நேற்று முன்தினம் (31) மதியம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், குறித்த 35 தொற்றாளர்களும், அப்பகுதியில் மீன் பதனிடும் தொழிற்சாலையில் கடமையாற்றுபவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது மிகவும் ஆபத்தான நிலையில் காணப்படுகிறமையால், குறித்த கிராமத்தின் MN/70 கிராம அலுவலர் பிரிவை தற்காலிகமாக தனிமைப்படுத்தும் வகையில் வேண்டுகோள் முன்வைத்துள்ளோம்.

விரைவில் குறித்த கிராமத்தில் உள்ள MN/70 கிராம அலுவலர் பிரிவு, தனிமைப்படுத்தப்பட்டு அந்தப் பிரதேச மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் எனவும், கே.சுதாகரன் தெரிவித்தார்.









## நினைவேந்தல்...

ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 14ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, யாழ். ஊடக அமையத்தில், நேற்று (01) நடைபெற்றது. (படப்பிடிப்பு: எம். றொசாந்த், எஸ். நிதர்ஷன்)

## கிணற்றில் விழுந்து சிறுமி பலி

வவுனியா, கனகராயன்குளம், ஆலங்குளம் பகுதியில், நேற்று (01) கிணற்றில் விழுந்து 7 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஆலங்குளம் பகுதியைச் சேர்ந்த நிசாந்தி என்ற 7 வயது சிறுமியே, இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சிறுமியின் பெற்றோர் வீட்டில் இல்லாத வேளையில், சிறுமி அயல் வீட்டுக்குச் சென்றதாகவும் எனினும் நீண்ட நேரமாகியும் சிறுமியைக் காணாத நிலையில் அயல் வீட்டார் தேடிய போது, அருகிலுள்ள கிணற்றில் சிறுமி விழுந்துள்ளமை கண்டறியப்பட்டதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து சிறுமி உடனடியாக மீட்கப்பட்டு, வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவில்

## டெல்டா அபாயம் இல்லை

■ விஜயரத்தினம் சரவணன்



டெல்டா வைரஸ் தொற்றுகளோடு முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை எவரும் இனங்காணப்படவில்லை என, முல்லைத்தீவு மாவட்ட தொற்றுநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி வி. வஜிதரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர், ஓமானிலிருந்து நாட்டுக்குத் திரும்பிய நிலையில், அவருக்கு டெல்டா தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அவர் தனிமைப்படுத்தல் நிலையத்தில் உள்ளதாகவும் அவரால் முல்லைத்தீவில் சமூகத்தொற்று இடம்பெறவில்லை எனவும் கூறினார்.

எனவே, டெல்டா தொற்றுத் தொடர்பில் முல்லைத்தீவு மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கொவிட்-19 தடுப்பூசி தொடர்பில் சில மக்களிடையே தவறான கருத்துகள் நிலவுகின்றன எனத் தெரிவித்த அவர், தடுப்பூசி ஏற்றும் விடயத்திலே பொதுமக்கள் பயம் கொள்ளத் தேவையில்லை என்றும் கூறினார்.

## வீடுகளில் உடன் குடியேறவும்

■ நடராசா கிருஸ்ணகுமார்




கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் அமைக்கப்பட்ட நிரந்தர வீடுகளில் இன்றுவரை குடியேறாதவர்களின் வீடு, காணி என்பன பிற பயனாளிகளுக்கு வழங்கப்படும் என கரைச்சி பிரதேச செயலாளர் பா.ஜெயகரன் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில், 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிரந்தர வீடுகளைப் பெற்றுக்கொண்டவர்கள், அவ்வீடுகளில் வசிக்காமல், பிற இடங்களில் வாழ்கின்றனர்.

இந்த நிலையில், குறித்த வீடுகள் பராமரிப்பற்று காணப்படுகின்றன. இதன் காரணமாகவே, நிரந்தர வீடுகளில், வெள்ளிக்கிழமை (30) முதல் குடியேற வேண்டும். அவ்வாறு இல்லையெனில், வீட்டின் பயனாளிகள் மாற்றப்படுவார்கள் எனவும் கரைச்சி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சியில்

## விழிப்புணர்வு நடைபயணம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி நண்பர்கள் குழாம் ஏற்பாடு செய்த விழிப்புணர்வு நடை பயணமொன்று, நேற்று (01) காலை முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை 5 மணிக்கு கிளிநொச்சி நகரில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த விழிப்புணர்வு நடை பயணம், ஏ9 வீதி ஊடாக பரந்தனை சென்றடைந்து, அங்கிருந்து பூநகரி - கரடிபோக்கு வீதி ஊடாக, கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தை வந்தடைந்தது.

18 கிலோ மீற்றர் தூரம் பயணித்த குறித்த நடை பயணத்தின் போது, துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இதில் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், அதிபர், ஆசிரியர் உள்ளிட்ட பல்துறை சார்ந்தோர் கலந்துகொண்டனர்.




# ஹிசாலினிக்கு நீதி கோரி...




■ எஸ். கணேசன், நீலமேகம் பிரசாந்த், எம். கிருஸ்ணா,எஸ். சதீஸ், நவி, ரமேஸ், மஹிந்தகுமார்.என்.ஆராச்சி

டயகம சிறுமி ஹிசாலினியின் மரணத்துக்கு நீதி கோரி, நேற்று (01) பூண்டுலோயா, பொகவந்தலாவ, ஹேராஹெட்ட-ஹேராப் தோட்டம், கந்தப்பளை, ஹட்டன், இரத்தினபுரி, மாலிபொட ஆகிய இடங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.












# ஆசிரியர்களின் ஆர்ப்பாட்டங்கள்...

■ கேதீஸ், ஷங்கீதன், ரமேஸ், சந்ரு, என். ஆராச்சி,

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கக் கோரி, நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், நேற்று (01) நுவரெலியா, கேகாலை நகரங்களில் பாரிய ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.










### செந்தில் தொண்டமானின் தலையீட்டால்

# மடுல்சீமைக்கு தீர்வு

லுணுகலை பிரதேச சபைக்கு உட்பட்ட மடுல்சீமை நகரத்தில் உள்ள வர்த்தக நிலையங்களால், மாதாந்தம் கட்டப்படும் வாடகை கட்டணம் 1,450 ரூபாயிலிருந்து 4,500 ரூபாயாக அதிகரிக்கப்பட்ட விவகாரத்துக்கு, பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளரான செந்தில் தொண்டமானால் தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மடுல்சீமை நகர வர்த்தகர்களால், செந்திலின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.



இந்த விடயம் தொடர்பில், லுணுகலை பிரதேச சபையின் தலைவருடன் கலந்துரையாடிய செந்தில் தொண்டமான், இந்த நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பையும் வெளியிட்டிருந்தார். அத்துடன் பழைய வாடகை கட்டணத்தையே வர்த்தகர்களிடம் அறவிட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இதையடுத்து, மீண்டும் வர்த்தகர்களிடம் பழைய கட்டணத்தையே அறவிடுவோமென உறுதிப்படுத்திய கடிதத்தை லுணுகலை பிரதேச சபையின் தலைவர் செந்தில் தொண்டமானுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

### நான்கு தொழிலாளர்களை தாக்கிய சிறுத்தைக்கு

# மூன்று நாள் காலக்கெடு

■ நீலமேகம் பிரசாந்த்

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட, டன்சினன் தோட்ட அக்கரமலை பிரிவில் சிறுத்தை தாக்கியதில் நான்கு தொழிலாளர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் (31) பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

**“ டன்சினன் தோட்ட நான்காம் இலக்க தேயிலை மலையில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்தபோது, சிறுத்தை தாக்கிய நால்வரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளோடு, மூன்று நாள்களுக்குள் குறித்த சிறுத்தையை தேடிக் கண்டுபிடித்து விடுவதாக நுவரெலியா வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்**

குறித்த தோட்டத்தின் நான்காம் இலக்க தேயிலை மலையில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த ஆண் தொழிலாளர்களையே சிறுத்தை தாக்கியுள்ளது.

சிறுத்தையின் தாக்குதலுக்கு இலக்கான நால்வரும், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளோடு, 3 நாள்களுக்குள் குறித்த சிறுத்தையை தேடிக் கண்டுபிடித்து விடுவதாக உறுதியளித்துள்ள நுவரெலியா வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், சிறுத்தையை தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.





# செயலமர்வு...

கண்டி சமாதான நிறுவனம், தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில், பன்விலையில், இருநாள் செயலமர்வு நடத்தப்பட்டது.

இந்நிறுவனத்தின் செயற்றிட்ட இணைப்பாளர் திருமதி சந்திரா அன்பழகனின் ஒழுங்குபடுத்தலில் ‘தேசிய மொழியைக் கற்போம்; மொழி உரிமையைத் தெரிந்துகொள்வோம்’ என்ற தலைப்பின் கீழ், பன்விலை க/வத்/விக்னேஸ்வரா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தெளிவூட்டல் கலந்துரையாடலில், மதகுருக்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மாத்தளையில் மீண்டும் கொரோனா பரவும் அபாயம்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை மாவட்டத்தில் மீண்டும் கொரோனா தொற்று அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால், மக்கள் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவது அவசியம் என, மாத்தளை மாவட்ட கொரோனா ஒழிப்பு குழுவின் ஒருங்கிணைப்பாளர் மேஜர் ஜெனரல் சிநாந்த மானகே தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்ற கொரோனா ஒழிப்பு கூட்டத்திலேயே இது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்படும் பி.சி. ஆர் பரிசோதனையின் முடிவுகள் திருப்திகரமாக இல்லையென்றும் தற்போதைய நிலையை மக்கள் புரிந்துக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தற்போது மாத்தளை மாவட்டத்திலுள்ள சிகிச்சை நிலையங்களில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதுடன், ஒட்சிசனின் தேவையும் அதிகரித்துச் செல்கிறது.

எனவே, சுகாதார வழிகாட்டல்களை மீறிச் செயற்படுவதை அனைவரும் தவிர்க்க வேண்டும். விசேடமாக மக்கள் ஒன்றிணைவது, அதிகமானவர்களுடன் உற்சவங்களை நடத்துவது என்பவற்றை சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி முன்னெடுப்பது அவசியம் என்றார்.

### பெரண்டினா நிறுவனம்

# 216 குடும்பங்களுக்கு உதவி

■ நீலமேகம் பிரசாந்த்

பெரண்டினா நிறுவனத்தால் நானுஓயா பகுதியிலுள்ள தோட்டங்களைச் சேர்ந்த வருமானம் குறைந்த குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு 2,000 ரூபாய் வவுச்சர்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதற்கமைய, சமர்செட் தோட்டத்தில் 88 குடும்பங்கள், பாமஸ்டன் 44 குடும்பங்கள்,டெஸ்போர்ட் 84 குடும்பங்கள் என, 216 குடும்பங்களுக்கு இந்த வவுச்சர்கள் வழங்கி வைக்கப்பட்டன.



குறித்த வவுச்சர்களை தபாலகங்களில் கொடுத்து உரிய பணத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் பெரண்டினா நிறுவனம் அறிவித்துள்ளது.



### ஹட்டன் ரயில் நிலையத்துக்கு அருகில்

# குப்பைகள் எரிப்பு; பலர் அசௌகரியம்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன் ரயில் நிலையத்துக்குரிய உத்தியோகபூர்வ குடியிருப்புக்கு முன்பாக, குப்பைகள் தீவைத்து எரிக்கப்படுவதால், அந்தப் பகுதியை அண்மித்தவர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இவ்வாறு குப்பைகள் எரிக்கப்படும் இடத்தின் ஊடாக ஹட்டன் தபால் நிலையம், ரயில் நிலையம், பொலிஸ் நிலையம், தேவாலயம் என்பவற்றுக்கு செல்லும் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.



எனினும், ஹட்டன்-டிக்கோயா நகர சபை பணியாளர்களே இவ்வாறு குப்பைகளை எரிப்பதாக ஹட்டன் ரயில் நிலைய அதிபர் எம். தேவதாசன் தெரிவித்தார்.

அண்மைக் காலமாக, கொரோனா தொற்றால் ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், இது ரயில் நிலையத்தில் சேகரிக்கப்படும் கழிவுகள் அல்லவென்றும், நகர சபை பணியாளர்கள் ஆங்காங்கே சேகரிக்கும் குப்பைகளே இவ்வாறு எரிக்கப்படுவதாகவும் குற்றஞ்சுமத்தினார். குறித்த இடத்தில் குப்பைகளை எரிக்க வேண்டாமென நகர சபை பணியாளர்களுக்கு பலமுறை அறிவுறுத்தியும், அவர்கள் அது குறித்து கவனமெடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# பாலுக்குப் பதிலாக வயிற்றில் புளியைக் கரைத்துவிடாதீர்கள்

மூவேளை என்பது குறைந்து குறைந்து வந்து, நேரங்கெட்ட நேரத்தில், ஏதாவது கிடைத்ததை வைத்து வயிற்றை நிரப்பிக்கொள்ளும் நிலைமையே பலரது வாழ்க்கையிலும் ஏற்பட்டுள்ளது. காலை உணவுக்குப் பதிலாக, ஒரு டீயைக் குடித்து பசியைப் போக்கிக்கொள்ளும் முறைமை இன்னுமே கடைப்பிடிக்கப்படுகின்றது.

பகலுணவும் இன்றி இரவு சாப்பாடும் இன்றி, இடைத்தட்டு நேரத்தில் ஒருவேளைக்கான உணவை உட்கொள்ளும் முறைமையொன்றை இன்னும் சிலர் கடைப்பிடிக்கின்றனர். நான்கு, ஐந்து கறிகளுடன் ஒருவேளைச் சாப்பாட்டை உண்டவர்கள் பலர், கறிகளின் எண்ணிக்கையை குறைத்துக்கொண்டுள்ளனர்.

ஏதோவொரு வகையில் செலவைக் குறைக்கும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன. இதில், காலையில் ஒரு டீயுடன் வயிற்றை நிரப்பிக்கொள்வோரின் எண்ணிக்கை அதிகமென சொல்லத்தான் வேண்டும். அவ்வாறானவர்களின் வயிற்றிலும் புளியைக் கரைத்துவிட்டால் போல, பால்மாவுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதா, ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதை, நுகர்வோர் அதிகார சபையே கண்டறியவேண்டும்.

விலைகளை அதிகரிப்பதற்கு அதிகார சபை இடமளிக்காத போதெல்லாம், பொருள்கள் பதுக்கிவைக்கப்பட்டு, வேண்டுமென்றே தட்டுப்பாட்டை ஏற்படுத்தியமை கடந்தகால படிப்பினைகளாக இருக்கின்றன. ஆகையால், பால்மா விடயத்திலும் இவ்வாறானதொரு நிலைமையொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கக் கூடுமென்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளது. பால்மாவின் விலையை அதிகரிப்பதற்காக, நிறுவனங்களால் விடுக்கப்பட்ட கோரிக்கையை, நுகர்வோர் அதிகார சபை நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பால்மா விடயத்திலேனும் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு, நுகர்வோரும் நிறுவனங்களும் பாதிப்படைந்துவிடக்கூடாது எனும் வகையில், உரிய தீர்வொன்றை எட்டுவது உடனடியான தேவையாக உள்ளது.

அதுமட்டுமன்றி, தாய்ப்பால் பருகும் குழந்தைகளுக்கு, புட்டிப்பாலும் ஊட்டப்படுகின்றது. பால்மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுமாயின், பால்குடியை மறவாத குழந்தைகளின் பசியைப் போக்குவது சிரமமான காரியமாகும். அத்துடன், ஊட்டச்சத்து கிடைப்பதும் குறைந்துவிடும்.

பால்மாவுக்குத்தான் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதே! ஆகையால், பசுப்பாலுக்குச் செல்வதே சிறந்த வழியாகுமெனப் பலரும் ஆலோசனைகளை வழங்கக்கூடும். நிறையுணவான பசுப்பால், நாட்டின் சகல பாகங்களிலும் கிடைக்கிறதா என்பது கேள்விக்குறியே? அத்துடன், சூடாக்கிப் பருகும்போது இரண்டு வேளைகளுக்கு மேல் வைத்திருக்கவும் முடியாது. குளிர்சாதனப்பெட்டி வசதிகளின்றி இருப்போரின் நிலைமை, பெரும் திண்டாட்டமாகிவிடும். ஆகையால், காலத்தைக் கடத்திவிடாது, பால்மா பிரச்சினைக்கு அதிரடியான தீர்வைப் பெற்றுத்தரவேண்டும்.

பால்மா இறக்குமதியை நிறுத்தியமையால் இவ்வாறானதொரு தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறப்படுகின்றது. ஆக, ஏகபோக உரிமையைக் கொண்ட நிறுவனங்களின் செயற்பாடுகள், அடுத்த தலைமுறையை போஷாக்கற்ற உலகுக்கு இழுத்துச்சென்றுவிடும்.

மிகவும் நெருக்கடியான காலக்கட்டத்தில் விலைகளை அதிகரிக்கக்கோருவது நியாயமானதல்ல. ஆயினும், செலவுகள் அதிகரிக்குமாயின் விலையை அதிகரிப்பதைத் தவிர மாற்று வழிகளே இல்லை. இரண்டும் ஒன்றிலொன்று தங்கியிருக்கிறது என்பதால், மரத்திலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாகிவிடக்கூடாது என்பதையே வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# வறுமையும் அரசியலும்



என்.கே. அஷோக்பரன்

ஹிஷாலினி என்ற 16 வயது சிறுமிக்கு நேர்ந்த கொடூரமும் அந்தச் சிறுமியின் அகால மரணமும், பல்வேறு வாதப்பிரதிவாதங்களைத் தோற்றுவித்துள்ளன.

இனவாதம் இந்த நாட்டுக்குப் புதியதல்ல. 16 வயது தமிழ்ச்சிறுமி, முஸ்லிம் இன அரசியல் செய்யும், ஒரு முஸ்லிம் அரசியல்வாதியின் வீட்டில் கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு, தீக்கிரையாகி மரணித்த கொடூரம், இரண்டு சமூகங்களைச் சார்ந்தவர்கள் இடையே, இனரீதியான வாக்குவாதங்கள் சமூக ஊடகப்பரப்பில் இடம்பெறும் நிலையைத் தோற்றுவித்துள்ளது.

எங்கெல்லாம் இனவெறி தலைதூக்குகின்றதோ, அங்கெல்லாம் அறிவு செத்துவிடுகிறது. ஒரு 16 வயது சிறுமியின் கொடூர மரணத்தை, நியாயமாக விசாரித்து, அதற்கு நீதி வழங்க வேண்டும் என்கிற கருத்தை அல்லவா, மதியுள்ள மக்கள் வலியுறுத்த வேண்டும். மாறாக, குற்றம்சாட்டப்பட்டவன், தான் சார்ந்த இனத்தவன் என்பதால், குற்றம் சாட்டப்பட்டவனுக்கான அபத்த நியாயங்களை வாதமாக முன்வைப்பதெல்லாம், இனவாதத்தால் மழுங்கிய மூளையின் சிந்தனையல்லாது வேறென்ன?

மறுபுறத்தில், ஓரினத்தைச் சேர்ந்த ஒருவனும் அவன் சார்ந்தவர்களும், ஒரு பெருங்குற்றத்தை இழைத்தார்கள் என்பதற்காக, அந்த இனத்தையே பொதுமைப்படுத்திச் சாடுவதும், அறிவு சார்ந்த காரியமல்ல.

இந்தக் குறுகிய இனவாத சிந்தனைகளைத் தாண்டி, நாம் என்றுதான் சிந்திக்கத் தொடங்கப் போகிறோம்? இந்த இனவாத ‘குழாயடிச் சண்டை’யில், அந்தச் சிறுமியையும் அவளுக்கான நீதியையும் அவளது உற்றோருக்கான நியாயத்தையும் மறந்துவிட்டார்கள். எத்தனை துர்பாக்கியம்மிக்க சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அந்தச் சிறுமியின் கொடூர மரணத்துக்கும் அவள் மீது நிகழ்த்தப்பட்ட வன்கொடுமைகளுக்கும், நியாயம் கிடைக்க வேண்டும். மனிதம் நிறைந்த மனங்கள் அதையே வேண்டிநிற்கும். சட்டம் தன் கடமையைச் செய்வதற்கான அழுத்தத்தைக் கொடுப்பதுதான், இங்கு சிறந்த குடிமக்கள் செய்யக் கூடிய அரும்பணியாக அமையும்.

நிற்க! ஆனால், இது இந்தச் சிறுமியின் மரணத்துக்கான நீதி நியாயத்துடன் நின்று விடக்கூடாது. ஹிஷாலினி என்ற இந்தச் சிறுமிக்கு நிகழ்ந்த கொடூரம், இனி இந்த நாட்டில் வேறெந்தச் சிறுமிக்கும் குழந்தைக்கும் நிகழக்கூடாது. அதுபற்றிச் சிந்திக்க வேண்டியது அத்தியாவசியம்.

இலவசக் கல்வி வழங்கப்படும் இந்நாட்டில், 14 வயதில் ஒரு சிறுமி, இன்னொருவர் வீட்டுக்கு வேலைக்கு அமர்த்தப்பட என்ன காரணம்? எத்தனை காரணங்கள் இருப்பினும், அடிப்படைக் காரணம் வறுமை.

‘கொடிது கொடிது வறுமை கொடிது; அதனினும் கொடிது இளமையில் வறுமை’ என்றார் ஔவைப் பாட்டி. 30,000 ரூபாய் கடனைத் திருப்பிச் செலுத்தவே, தனது மகளை வீட்டு வேலைக்கு அனுப்ப வேண்டிய நிலை வந்ததாக, அவரின் தாய் கூறியதாக செய்தி பதிவு செய்திருந்தது.

அப்படி, வீட்டு வேலைக்குச் சென்ற அந்தச் சிறுமியை, வேலைக்கமர்த்திய அந்த அரசியல்வாதியின் வீட்டாரால் உடல், உள ரீதியாகத் துன்புறுத்தப்பட்டதாக, தனது தாயிடம் கூறியிருப்பதாகத் தாய் தெரிவிக்கிறார். என்ன மாதிரியான சமூகத்தில், நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்ற சினமும் இயலாமையும் எண்ணமும் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

மறுபுறத்தில், தன் வீட்டில் ஒரு சிறுமி இவ்வாறு நடத்தப்படுவதைத் தடுக்க முடியாத ஒருவன், தன்னை எப்படி மக்களின் தலைவன் என்று சொல்லிக் கொள்ள முடியும்? முதலில், உன் வீட்டில் ஒரு குழந்தை துன்புறுத்தப்படுவதைத் தடுக்க முடியாத நீ, மனிதனே அல்ல!

மறுபுறத்தில், இன்று ஹிஷாலினிக்கு நியாயம் பெற்றுத் தருவோம் என்று கிளம்பியுள்ள மலையகத் தலைவர்களின் நிலை அபத்தமானது; அசிங்கமானது. பல கோடி ரூபாய்கள் பெறுமதியான வாகனங்களில் சுற்றிக்கொண்டிருக்கும் இவர்கள்தான், 30,000 ரூபாய் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக, 16 வயதுச் சிறுமியை வீட்டு வேலைக்கு அமர்த்த வேண்டிய நிலையிலுள்ள மக்களின் தலைவர்களாம்! எவ்வளவு பெரிய வெட்கக்கேடு.

தமது மக்களின் நலனில், அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளில் அக்கறை கொண்டு, இந்தத் தலைவர்கள் எனத் தம்மைத் தாமே சொல்லிக் கொள்பவர்கள் செயற்பட்டிருந்தால், இந்த 16 வயதுச் சிறுமிக்கு இந்தக் கொடூரம் நேர்ந்திருக்காது.

“தோட்டத் தொழிலாளருக்கு 1,000 ரூபாய் சம்பளம்” என்பது, இந்தத் தலைவர்கள் எனப்படுவோரின் தாரக மந்திரம். இவர்கள், இந்தக் கோரிக்கையை முன்வைக்கத் தொடங்கிய போது, ஒரு டொலர் 150 ரூபாய்க்கும் குறைவாக இருந்தது. இன்று ஒரு டொலர் உத்தியோகபூர்வ சந்தையில் 200 ரூபாயைத் தாண்டிவிட்டது. ரூபாயின் பெறுமதி கணிசமாக வீழ்ந்திருந்தாலும் விலைவாசி கண்டபடி ஏறியிருந்தாலும், கிட்டத்தட்ட ஒரு தசாப்தகாலமாக 1,000 ரூபாய் சம்பளம் கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள், இந்த தலைவர்கள் எனப்படுவோர்.

போதாக்குறைக்கு, இந்தத் தலைவர்கள் எனப்படுவோரே தொழிற்சங்கங்களையும் நடத்துகிறார்கள். அதற்காக, அந்த அப்பாவித் தொழிலாளர்கள் பெறும் ஆகக் குறைந்த சம்பளத்திலும், ‘தொழிற்சங்க சந்தா’ என ஒரு தொகையைப் பிடுங்கிக் கொள்கிறார்கள். எத்தனை சிறந்த தலைவர்கள் இவர்கள்!

மறுபுறத்தில், “மலையகத்துக்கு என்று ஒரு பல்கலைக்கழகம்” என்று, வாய்கிழிய பல வருடங்களாகக் கூவினார்களேயன்றி, அதைச் சாத்தியப்படுத்தினார்களா? மலையகத் தலைவர் ஒருவரேனும் அங்கத்துவம் வகிக்காத அரசாங்கம், கடந்த மூன்று தசாப்தங்களில் அமைந்திருக்கிறதா? அப்படியானால், அந்த மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாததன் பொறுப்பை ஏற்க வேண்டியவர்கள் யார்?

மலையக மக்களுக்கு உரிய கல்வி, உயர்கல்வி, தொழிற்பயிற்சி, தோட்டத்தொழிலுக்கு மாற்றான வேலைவாய்ப்புகள், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுத்தால், ஹிஷாலினியைப் போன்ற சிறுமிகள், வீட்டு வேலைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படாது.

ஆகவே, இன்று தங்களுடைய அரசியலுக்காக, “ஹிஷாலினிக்கு நீதி வேண்டும்” என்று, களத்தில் குதித்துள்ள இந்த மலையகத்தின் தலைவர்கள் எனப்படுவோரும், ஒருவகையில் ஹிஷாலினியின் கொடூரத்துக்குப் பொறுப்பாளிகள்.

“உலகை மாற்றப் பயன்படுத்தக் கூடிய மிகச் சக்திவாய்ந்த ஆயுதம் கல்வி” என்பார் நெல்சன் மண்டேலா. கல்வியும் உயர் கல்வியும் அதனூடாக வேலைவாய்ப்புகளும் இந்த நாட்டில் எத்தனையோ மக்களின் வாழ்க்கைத் தரத்தை, ஒரே தலைமுறையுடன் மாற்றியமைத்து இருக்கிறது. அதைப் பலரும் கண்கூடாகக் கண்டிருக்கிறார்கள்.

இனவாதம், இனவெறி, வறுமை எனச் சாபங்கள், அசிங்கங்கள் நிறைந்த இந்த நாட்டின் மிகச் சொற்ப வரங்களில் ஒன்று இலசக் கல்வி. ஆனால், அதன் பயன் மலையகத்தை முழுமையாகச் சென்றடையவில்லை என்று சொன்னால் அது மிகையல்ல. அந்த மக்கள், தலைமுறை தலைமுறையாகத் தோட்டத் தொழிலாளர்களாகவே இருக்கவும், வறுமையின் காரணமாக தங்கள் பிள்ளைகளை வீட்டு வேலைக்கு அனுப்பவும் சபிக்கப்பட்டவர்களா என்ன?


கல்வியும் உயர்கல்வியும் இந்த நிலையை மாற்ற வேண்டும். தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான அடிப்படைச் சம்பளமும் மருத்துவக் காப்புறுதி உட்பட்ட அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இதெல்லாம் சட்டவாக்கம், சட்ட நிர்வாகத்தால் செய்யக் கூடிய காரியங்களேதான்.

மலையகத் தலைமைகள் எனப்படுவோர், இந்நாட்டின் சட்டவாக்கம், சட்ட நிர்வாகத்தில் பங்காளிகளாக இருக்கிறார்கள். இனியேனும் தாமதிக்காமல், இதைச் செய்ய வேண்டும். ஹிஷாலினிக்கு நிகழ்ந்த கொடூரம் இனி வேறொரு சிறுமிக்கும் நிகழக்கூடாது.

வறுமை என்பது மாற்றப்படக் கூடியதொன்று. கடந்த ஒரு நூற்றாண்டில் உலக வறுமை கணிசமாகக் குறைந்துள்ளது. அதிலும் குறிப்பாக, இலங்கை போன்ற மக்கள் நலன்புரி அரசில், இதற்கான முறையான திட்டங்களை வினைத்திறனாக அமல்ப்படுத்துவதன் மூலம், இதனை இலகுவாகச் சாதித்துக்கொள்ள முடியும்.

வறுமையை ஒழிப்பதற்கான பலம், வினைத்திறனான அரசியலிடம் இருக்கிறது. ஆனால், சாதிப்பதற்கு உண்மையான, நேர்மையான, மக்களை விசுவாசமாக நேசிக்கும் தலைமைகள் தேவை. மலையகத்தில் அத்தகைய தலைமைகள் இருப்பதாகத் தெரியவில்லை. தமது வயிற்றுப் பிழைப்புக்காக மலையக மக்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தும் தலைமைகள்தான் மலையக மக்களின் பெரும் சாபக்கேடு.

மக்களை விவரம் தெரியாதவர்களாக, வறுமை நிலையிலேயே வைத்துக்கொண்டு, பொய்யான வாக்குறுதிகளையும் நிறைவேறாத நம்பிக்கைகளையும் மீண்டும் மீண்டும் வழங்கி, அவர்களின் வாக்குகளை அறுவடை செய்துகொண்டு, அந்த மக்களுக்கு எந்த நன்மையும் விளையாத கேவலமான அரசியலை முன்னெடுத்து வருகிறார்கள். அடுத்து வரும் இளந்தலைமுறையாவது, இந்த நிலைமையை மாற்றும் என்று எண்ணுவோமாக!



## வாழ்வியல் தரிசனம்

ஒருவரது ஆற்றாமை, ஏனையோருக்குத் தென்பு ஊட்டுவதாக அமையலாகாது. எங்கே ஓர் அப்பாவி விழுகின்றான் என்பதை, எதிர்பார்க்கும் நபர்கள் இருக்கின்றார்கள்.

ஒருவரது பலவீனத்தின் மூலம், தாங்கள் பலமானவர்களாக முடியும் என எண்ணுவதே துரோகத்தனம்தான். முயற்சி செய்யாமல் தட்டிப்பறிக்க எண்ணும் கூட்டங்கள் ஒருபோதும் சுயபலத்தை நம்புவதில்லை; துர்க் குணங்களைக் கைவிடுவதுமில்லை.

ஒழுக்கக்கேடான செயல், உழைப்பதற்கு எளிதான காரியம் என்று எண்ணுபவர்கள், நியாய தர்மங்களை உபதேசம் செய்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள்.

பலவீனமான குணங்களுடன் வாழும் நபர்கள், அதனை ஒருபோதும் ஒத்துக்கொள்வதுமில்லை. துணிச்சலுடன் எழுச்சியும் நெஞ்சுக்குள் வீரமும் அவசியம்.

திறமையான விளையாட்டு வீரர்கள் கூட, சில சமயம், தன்னுடன் போட்டியிடுபவர்கள் தன்னை வென்று விடுவார்களோ என எண்ணுவர்கள்; ஆனால் அவ்வாறு நினைக்கக்கூடாது. போட்டியில் விட்டுக்கொடுத்தல் கூடாது. துணிச்சலற்றவர்களை வீழ்த்திவிட, இரக்கமற்றவர்கள் காத்திருக்கின்றார்கள்.

பருத்தியூர் பால- வைரவநாதன்

## கடிதங்கள்

### குடிநீருக்குத் தட்டுப்பாடு

கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன்குளம், பாரதிபுரம், பொன்னகர் போன்ற பகுதிகளில் குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவி வருவதால், தாங்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பாரதிபுரம், மலையாளபுரம், பொன்னகர் ஆகிய பகுதிகளில் குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவி வருகிறது. குறிப்பாக, இந்தப் பிரதேசங்களில் காணப்படும் கிணறுகள், நீர் வற்றிய நிலையில் காணப்படுவதால் தற்போதைய வரட்சி காரணமாக குடிநீருக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால், இந்தப் பிரதேசத்தில் மக்கள் தமக்கான குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று கிளிநொச்சி, அக்கராயன்குளம் பகுதிகளில் குடிநீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, கெங்காதரன் குடியிருப்பின் மாஸ்நகர், ஆனைவிழுந்தான் போன்ற பகுதிகளிலும் இவ்வாறு குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் இங்கு வசிக்கும் தாங்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். எனவே, தமக்கான குடிநீர் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத்தருமாறு கோரியுள்ளனர்.

யது பாஸ்கரன்



# புதிய இறக்குமதி கட்டுப்பாடுகளை விதிக்கும் எண்ணமில்லை

## திறைசேரி செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல

இலங்கையில் எவ்விதமான புதிய இறக்குமதிக் கட்டுப்பாடுகளையும் விதிக்கத் திட்டமிடப்படவில்லை எனவும், இயலுமானவரை ஏற்கெனவே காணப்படும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தத் தாம் எதிர்பார்ப்பதாக திறைசேரி செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல தெரிவித்தார்.



"புதிய கட்டுப்பாடுகளை விதிக்க நாம் எதிர்பார்க்கவில்லை. இயலுமாயின் கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும். ஆனாலும், உடனடியாக அது சிறந்த விடயமாக அமையாது. உதாரணமாக அலைபேசிகள் இறக்குமதிக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டால், ஒன்லைன் பொருளாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். அதுபோன்று, பெருமளவான உள்நாட்டு தொழிற்றுறைசார் செயற்பாடுகளுக்கும் இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்கள் தேவைப்படுகின்றன. ஆனாலும் தங்கம், வாகனங்கள், டைல்ஸ் போன்றவற்றின் மீதான கட்டுப்பாடுகள் தொடரும்.

எரிபொருள் இறக்குமதியைக் குறைப்பதற்காக, புதுப்பிக்கத்தக்க வலுவைப் பயன்படுத்த இலங்கை முயற்சி செய்கின்றது. அதனூடாக அந்நியச் செலாவணியை சேமித்து, ஏற்றுமதியை அதிகரிப்பதனூடாக அதிகளவு டொலர் வருமானத்தைப் பெறக்கூடியதாக இருக்கும்.

புதிய திரள்வுகள் வங்கிகளால் கட்டுப்படாத பகுதிகளில் கடனாகச் செலுத்தப்படும் என்பதால், பணம் அச்சிடப்படுமானால் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் பயனற்றதாக அமைந்திருக்கும் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

2020 ஆம் ஆண்டில் முடக்கநிலை, தனிமைப்படுத்தல் அமலாக்கம் செய்யப்பட்டதால், குறைந்த நுகர்வு காரணமாக இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்திருந்தன. ஆனாலும், நடப்பு ஆண்டில் இது மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளது" என அவர் தெரிவித்தார்.

"பணம் அச்சிடப்படும் போது, உள்நாட்டு பொருளாதார முகவரிகளின் செலவிடும் திறனும் அதிகரித்து டொலர் உள்வருகையை விஞ்சுவதால், நாட்டினுள் அந்நியச் செலாவணி வரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், கையிருப்பிலுள்ள அந்நியச் செலாவணியிலும் இழப்புகளை பதிவு செய்கின்றது. நிதி வரி குறைநிரப்பாகவும், வட்டி வீதங்களை குறைந்த மட்டத்தில் பேணும் வகையில் பணத்தை அச்சிடும் பணிகளை இலங்கை மேற்கொள்கின்றது.

இலங்கையில் கடந்த காலங்களில் வட்டி வீதங்களை குறைந்த மட்டத்தில் பேணுவதற்காக பணம் அச்சிடப்பட்ட காலப்பகுதிகளில் மீதிக் கொடுப்பனவுகள் நெருக்கடி நிலைகள் ஏற்பட்டிருந்தன. ஆனாலும் 2020 ஆம் ஆண்டில் பொருளாதார ஊக்குவிப்புகளை கவனத்தில் கொண்டு வரிகளும் குறைக்கப்பட்டிருந்தன" என மேலும் தெரிவித்தார்.

# புதிய நிறைவேற்று அதிகாரியை தேடும் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ்

தேசிய விமான சேவையான, ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ், புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியை நியமிப்பதற்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது.




தற்போதைய பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றும் விபுல குணதிலக, ஒகஸ்ட் 2018 ஆம் ஆண்டில் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். இவர் விரைவில் இந்தப் பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக பல சர்வதேச விமான சேவைகளைப் போன்று, ஸ்ரீ லங்கன் விமான சேவையும் இழப்புகளைப் பதிவு செய்துள்ளது. குறைந்தளவான பயணிகள், குறைந்தளவான விமான சேவைகள் காரணமாக இந்த இழப்புகள் பதிவாகியுள்ளன.

மார்ச் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிதியாண்டில், விமான சேவையின் வருமானம் 70 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்திருந்ததாக விமான சேவை அறிவித்திருந்தது.

முன்னைய ஆண்டில் பதிவாகியிருந்த 178 மில்லியன் அமெரிக்க டொலர் இழப்புடன் ஒப்பிடுகையில், கடந்த ஆண்டில் 128.9 மில்லியன் அமெரிக்க டொலர் இழப்பை விமான சேவை பதிவு செய்திருந்தமையை குறித்த ஆண்டறிக்கையிலிருந்து அவதானிக்க முடிந்தது.

சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்தில் விமான சேவை பெருமளவு தங்கியிருப்பதுடன், ஐரோப்பாவிலிருந்தான வெளியக பிரயாணங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தமை காரணமாக, சுற்றுலாப் பயணிகளின் பயணங்கள் வீழ்ச்சியடைந்திருந்தன.

2021 ஜனவரி முதல் ஜூன் வரையான காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 16,908 ஆக பதிவாகியிருந்ததுடன், இந்தப் பெறுமதி கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் 507,704 ஆகக் காணப்பட்டது.

### சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களுக்கு அதிக பாதுகாப்புத் தேவை

# ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தல்

இலங்கையின் சங்கங்களுக்கு எதிரான பாகுபாடுகளிலிருந்து இலங்கையின் பணியாளர்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது முக்கியமானது என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.



2018 - 2019 வரையான காலப்பகுதியை உள்வாங்கி, 2020 பெப்ரவரி மாதம் GSP அறிக்கையில் இலங்கையின் மதிப்பாய்வின் போது, சங்கங்களுக்கு எதிரான பாகுபாடுகளிலிருந்து சுதந்திர வர்த்தக வலய பணியாளர்களை பாதுகாப்பதற்கு போதியளவு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியமை புலப்படுவதாக, தாம் அனுப்பிய கடிதத்துக்கு பதில் அனுப்பிய ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளதாக, இலங்கை சுதந்திர வர்த்தக வலய தொழிற்சங்க இணை செயலாளர் அன்டன் மார்கஸ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில், இலங்கையின் அதிகார தரப்பினருடன் தொடர்ந்து கைகோர்த்து செயலாற்ற எதிர்பார்ப்பதாக, ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளதுடன், ஏற்றுமதி வர்த்தக வலயங்களில் சங்கங்களுக்கான சுதந்திரத்தை உறுதி செய்வதிலும் கவனம் செலுத்துவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலையான கண்காணிப்பு முறைமையை நிறுவுவதற்கான தொழிற்சங்கங்களின் கோரிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், GSP+ கண்காணிப்பு பணிகள் ஏற்கெனவே தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதுடன், GSP அறிக்கை வெளியீட்டின் போது மாத்திரம் அவ்வாறான கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அதிகாரத் தரப்பினர், வியாபாரங்கள், தொழிற்சங்கங்கள் ஆகிய முத்தரப்புகளுக்கு இடையில் கலந்துரையாடல்களை மேற்கொண்டு, தொழிலாளர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதைத் தாம் ஊக்குவிப்பதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியம் நேரடியாக் தலையீட்டை மேற்கொள்வது அல்லது குறித்த கலந்துரையாடல்களில் பங்கேற்பது பொருத்தமற்றதாகவும் குறிப்பிட்டுள்ளது.

தொழிற்சங்கங்களுடன் திறந்ததும் அடிக்கடியும் கலந்துரையாடல்களை மேற்கொள்ள அவர்கள் முன்வந்துள்ளனர், அதிகாரத் தரப்பினருடன் எமது தொடர்பாடல்களை பேண உதவியாக இது இருக்கும் என ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.




### விவசாயிகளுக்கு ஆதரவாக

# ராகுலின் நாடகம் அம்பலமாகுமா?

விவசாய சட்டங்களை எதிர்த்துப் போராடும் விவசாயிகளுக்கு ஆதரவாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல், பாராளுமன்றத்துக்கு டிராக்டரில் வந்தது, தற்போது பேசுபொருளாகியுள்ளது. இது போன்ற, 'நாடகங்கள்' உண்மையில் பலன் தருமா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

விவசாய சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பஞ்சாப், ஹரியானா, உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த சில விவசாய சங்கங்கள், டெல்லி எல்லையில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சமீபத்தில் பாராளுமன்றத்துக்கு டிராக்டரில் வந்தார் ராகுல். அவருடன் கட்சி எம்.பிக்கள் பிரதாப் சிங் பஜ்வா, ரன்வீத் சிங் பிட்டு, திபெந்தர் சிங் ஹூடா உள்ளிட்டோரும் வந்திருந்தனர்.

விவசாயிகளுக்கு ஆதரவாக போஸ்டர்கள் வைத்திருந்தனர்; விவசாயிகளுக்கு ஆதரவாகவும் பிரதமர் மோடிக்கு எதிராகவும் கோஷமிட்டனர். ராகுலின் இந்த டிராக்டர் பேரணியை, 'நாடகம், விளம்பர அரசியல்' என, மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி கூறியுள்ளது.




### கொரோனா மூன்றாம் அலை

# தவிர்க்க முடியாததாகி விடுமோ?

கடந்த 2, 3 நாள்களாக கொரோனா குறித்து வெளிவரும் அரசாங்கத்தின் அறிக்கையைப் பார்க்கும்போது, மூன்றாவது அலை தவிர்க்க முடியாததாகி விடுமோ என்ற சூழ்நிலை எழுந்துள்ளதென அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா தொற்றின் தாக்கம் குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, கட்டுப்பாடுகளுடன் கூடிய ஊரடங்கு தளர்வுகளை அரசாங்கம் அறிவித்ததையடுத்து, வழிபாட்டுத் தலங்களிலும், சுற்றுலாத் தலங்களிலும் கூடிய கூட்டத்தைச் சுட்டிக்காட்டி, இது மூன்றாவது அலைக்கு வழிவகுத்து விடுமோ என்ற அச்சத்தை நான் ஜூலை 12இல் அறிக்கை வாயிலாக வெளிப்படுத்தியிருந்தேன்.

தற்போது, இரண்டு, மூன்று நாள்களாக கொரோனா குறித்து வெளிவரும் அரசாங்கத்தின் அறிக்கையைப் பார்க்கும்போது, 3வது அலை தவிர்க்க முடியாததாகி விடுமோ என்ற சூழ்நிலை எழுந்துள்ளது.

> **"கொரோனா தொற்றின் தாக்கம் குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, கட்டுப்பாடுகளுடன் கூடிய ஊரடங்கு தளர்வுகளை அரசாங்கம் அறிவித்ததையடுத்து, வழிபாட்டுத் தலங்களிலும், சுற்றுலாத் தலங்களிலும் கூடிய கூட்டம், மூன்றாவது அலைக்கு வழிவகுத்து விடுமோ என்ற அச்சம்...**

முகக் கவசம் அணிந்திருக்கிறார்களா, சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கும் அளவுக்குதான் கடைகளுக்குள் மக்கள் கூட்டம் இருக்கிறதா, இதே கட்டுப்பாடுகள் வழிபாட்டுத் தலங்களிலும், சுற்றுலாத் தலங்களிலும் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதையும் கண்காணித்து நடைமுறைப்படுத்துவதில் சுணக்கம் நிலவுவதாகத் தெரிகிறது.

எனவே, முதலமைச்சர் இதில் தனிக் கவனம் செலுத்தி, கட்டுப்பாட்டு விதிகள் கடைப்பிடிக்கப்படுவதை 100 சதவீதம் உறுதி செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை

### மீண்டும் கொரோனா

# கோவில்களில் தரிசனத்துக்குத் தடை

கொரோனா வைரஸ் பரவல் மீண்டும் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து, தமிழகம் முழுவதும் கோவில்களில் தரிசனத்துக்கு தமிழக அரசாங்கம் தடை விதித்துள்ளது.

பொங்கல் வைத்து, எடுத்து வந்து கோவில் அருகில் முடி காணிக்கை செலுத்தினார்கள். இதேபோன்று கந்தகோட்டம் முருகன் கோவிலிலும் தரிசனம் ரத்து செய்யப்பட்ட போதிலும் பக்தர்கள் வெளியில் நின்று சாமி தரிசனம் செய்தனர்.

திருத்தணி முருகன் கோவில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள குமரக்கோட்டம், வல்லக்கோட்டை, குன்றத்தூர் முருகன் கோவில்களிலும் பக்தர்கள் சாமி தரிசனத்துக்காக அனுமதிக்கப்படவில்லை.

இதேபோன்று திருப்போரூர் முருகன் கோவிலிலும் பக்தர்கள் சாமி தரிசனத்துக்காக அனுமதிக்கப்படவில்லை.

கோவிலுக்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டதால் வெளியில் நின்று பக்தர்கள் சாமி கும்பிட்டனர்.

திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோவில், பெரியபாளையம் பவானி அம்மன் கோவில், சிறுவாபுரி பாலசுப்பிரமணிய சுவாமி கோவில், ஆண்டாள் குப்பம் பாலசுப்பிரமணிய சுவாமி கோவில், புட்லூர் பூங்காவனத்தம்மன் கோவில் ஆகிய கோவில்களில் நேற்று முதல் 3 நாள்கள் பக்தர்களுக்கு அனுமதி இல்லை என்று திருவள்ளூர் கலெக்டர் அறிவித்துள்ளார்.



சென்னை

# மெரினா கடற்கரைக்கு செல்லத் தடை

தமிழகத்தில் கொரோனா இரண்டாவது அலையின் தீவிரம் கடந்த சில வாரங்களாக குறைந்து இருந்தது. எனினும், கொரோனா 3வது அலைக்கான சாத்தியம் உள்ளதென வைத்திய நிபுணர்களின் எச்சரிக்கையை முன்னிட்டு, தடுப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக, சென்னையில் மெரினா உள்ளிட்ட கடற்கரைக்கு செல்ல பொலிஸார் அனுமதி அளிக்கமாட்டார்கள் என சென்னை மாநகராட்சி ஆணையாளர் ககன்தீப் சிங் பேடி அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளார்.

அத்தியாவசியத் தேவை இருந்தால் மட்டும் வீட்டை விட்டு வெளியே வர வேண்டும். திருமணங்களில் சாப்பிடும் போதும் தனிமனித இடைவெளி பின்பற்றப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.





ஐ. அமெரிக்கா

### மஷுட்ஸ் கொரோனா பரவலில் பெரும்பாலானோர்

# தடுப்பூசியை செலுத்திக்கொண்டோர்

ஐக்கிய அமெரிக்காவின் மஷுஸெட்ஸின் கேப் கோட்டின் நகரம் ஒன்றில் கடந்த மாதம் பொது நிகழ்வுகளில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களில் நான்கில் மூன்று பங்கினர், முழுமையாக தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் என, அந்நாட்டின் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நிலையங்களின் ஆராய்ச்சி வெளிப்படுத்தியுள்ளது.

தடுப்பூசி செலுத்தியவர்களும், தடுப்பூசி செலுத்தாதவர்களும் ஒரே அளவான வைரஸின் வீரியத்தைக் கொண்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், டெல்டா மாறியால் தொற்றுக்குள்ளாகும் தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களும் வைரஸைப் பரப்பலாம் என இந்நிலையங்கள் தெரிவித்துள்ளன.

தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் பைஸர், மொடெர்னா, ஜோன்ஸன் அன்ட் ஜோன்ஸனின் தடுப்பூசியையே பெற்றுள்ளனர்.

பிரித்தானியா

### இளைஞர்களிடையே தடுப்பூசியை ஊக்குவிக்க

# வாடகைக் கார், உணவு சலுகைகள்

கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதற்காக இளைஞர்களுக்கு உணவு, வாடகைக் கார்களில் சலுகை வழங்கப்படும் என பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது. தடுப்புமருந்தைப் பெறுவதை ஊக்குவிக்கும் முகமாகவே இவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது.

ஊபர், போல்ட், டெலிவெரூ, பீஸா பில்கிரிம்ஸ் போன்றவையே தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு சலுகைகளை வழங்குகின்றன.





ஐ. அமெரிக்கா

### வீடுகளிலிருந்து வெளியேற்றம்:

# கப்பிட்டல் வளாகத்தில் இரவை கழித்த உறுப்பினர்

ஐக்கிய அமெரிக்காவின் கப்பிட்டலில் நித்திரையில்லாத இரவு ஒன்றை அந்நாட்டின் பிரதிநிதிகள் சபை உறுப்பினர் கொரி புஷ் கழித்துள்ளார்.

கொரோனா பரவல் காரணமாக வீடுகளுக்கு மாதாந்தம் செலுத்தும் கட்டணம் செலுத்தாதவர்களுக்கான சலுகைக்காலமானது கடந்த சனிக்கிழமையுடன் முடிவடைகின்றமைக்கு எதிராக இவ்வாறு புஷ் போராட்டத்தை மேற்கொண்டிருந்தார்.

தான் அரசியலுக்குள் நுழைய முன்னர் மூன்று தடவைகள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்ட புஷ், தனது காரில் இரண்டு பிள்ளைகளுடன் வசித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனி

### மத்திய தரைக் கடலில்

# 100 அகதிகள் மீட்பு

மத்திய தரைக் கடலில் நேற்று முன்தினமிரவு (31) ஏறத்தாழ 100 அகதிகளை மீட்டதாக ஜேர்மனிய தொண்டு நிறுவனமான சீ வோச் தெரிவித்துள்ளது.

இதில் பலர் காயமடைந்துள்ளதுடன், சிலர் மோசமான எண்ணெய் எரி காயங்களைக் கொண்டிருந்துள்ளனர். எண்ணெய், கடல்நீருடன் கலப்பதாலேயே இக்காயம் ஏற்படுகின்றது.



பிரித்தானியா

# பிரதமர் ஜோன்ஸனுக்கு இரண்டாவது குழந்தை

பிரித்தானியப் பிரதமர் பொரிஸ் ஜோன்ஸனும், அவரது மனைவி காரியும் இரண்டாவது குழந்தையை எதிர்பார்ப்பதாக பிரித்தானிய ஊடகங்கள் நேற்று முன்தினம் (31) செய்தி வெளியிட்டுள்ளன.

> **பிரித்தானியப் பிரதமர் பொரிஸ் ஜோன்ஸனும், அவரது மனைவி காரியும் இரண்டாவது குழந்தையை எதிர்பார்த்திருக்கிறார்கள். இதேவேளை, இரண்டாவது மனைவி மரினா வீலருடன் நான்கு பிள்ளைகளைக் கொண்டுள்ள ஜோன்ஸன், எத்தனை பிள்ளைகளுக்கு தான் தந்தை எனக் குறிப்பிடவில்லை**

இவர்களின் முதலாவது குழந்தையானது வில்ஃபிரைட், கடந்தாண்டு ஏப்ரல் மாதம் பிறந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இவ்வாண்டு ஆரம்பத்தில் தனது கருக்கலைந்ததாக காரி குறிப்பிட்டுள்ளார்.

தனது இரண்டாவது மனைவி மரினா வீலருடன் நான்கு பிள்ளைகளைக் கொண்டுள்ள ஜோன்ஸன், எத்தனை பிள்ளைகளுக்கு தான் தந்தை எனக் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



பிரித்தானியா

### ஒட்சிசன் கண்காணிப்பான்கள்

# கறுப்புத் தோலில் இயங்கவில்லை

கறுப்புத் தோலில் பல்ஸ் ஒட்சிசன் கண்காணிப்பான்களின் தொழிற்படுதிறன் குறைவாகவே காணப்படுவதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

> **குறித்த சாதனம், கொரோனா நோயாளிகளின், ஒட்சிசன் மட்டத்தைக் கூட்டி மதிப்பிடுகிறது**



குறித்த சாதனத்தின் மூலமே கொரோனா நோயாளிகளில், ஒட்சிசன் மட்டம் வீழ்ச்சியடைவது அவதானிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

சில நேரங்களில் குறித்த சாதனம் ஒட்சிசன் மட்டத்தைக் கூட்டி மதிப்பிடுவதாக பிரிதானியாவின் மருத்துவ ஒழுங்குபடுத்துநர் எம்.எச்.ஆர்.ஏ தெரிவித்துள்ளது.



### டோக்கியோ 2020:

# 7 பதக்கங்களை வென்றார் மக்கியோன்

ஒலிம்பிக் போட்டியில் ஏழு பதக்கங்களை வென்ற முதலாவது நீச்சல் வீராங்கனையாக அவுஸ்திரேலியாவின் இம்மா மக்கியோன் நேற்று (01) மாற்றியிருந்தார்.

50 மீற்றர் பிறீஸ்டைலிலும், 4 x100 மீற்றர் மெட்லி அஞ்சலோட்டத்திலும் தங்கப் பதக்கங்களையும் வென்றமையையடுத்தே மேற்குறிப்பிட்ட சாதனையை மக்கியோன் படைத்திருந்தார்.

இப்போட்டிகள் தவிர, 100 மீற்றர் பிறீ ஸ்டைல், 4x100 மீற்றர் பிறீ ஸ்டைல் அஞ்சலில் தங்கப் பதக்கங்களையும், கலப்பு 4x100 மீற்றர் மெட்லி அஞ்சலோட்டம், 100 மீற்றர் பட்டர்பிளை, 4x200 மீற்றர் பிறீஸ்டைல் அஞ்சலோட்டத்தில் வெண்கலப் பதக்கங்களை மக்கியோன் வென்றிருந்தார்.

இதேவேளை, ஆண்களுக்கான 50 மீற்றர் பிறீஸ்டைலில் ஐக்கிய அமெரிக்காவின் கேலெப் ட்ரஸல் வென்றிருந்தார்.

இந்நிலையில், ஆண்களுக்கான 4x100 மீற்றர் மெட்லி நீச்சல் அஞ்சலோட்டத்தில், மூன்று நிமிடங்கள் 26 செக்கன்கள் 78 மில்லி செக்கன்கள் என்ற உலக சாதனைப் பெறுதியுடன் ஐ. அமெரிக்கா தங்கம் வென்றிருந்தது.

பதக்கப் பட்டியலில், இலங்கை நேரப்பட்டி நேற்றுப் பிற்பகல் 3 மணி வரையில், 23 தங்கம், 14 வெள்ளி, 13 வெண்கலப் பதக்கங்களுடன் முதலிடத்தில் சீனா உள்ளது, 20 தங்கம், 20 வெள்ளி, 14 வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாமிடத்தில் ஐ. அமெரிக்காவும், 17 தங்கம், ஐந்து வெள்ளி, எட்டு வெண்கலப் பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் ஜப்பான் உள்ளது.



### டோக்கியோ 2020:

# மீண்டும் விலகிய பைல்ஸ்

ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளின் பெண்களுக்கான இன்று (02) நடைபெறவுள்ள தனிநபர் புளோர் ஜிம்னாஸ்டிக் இறுதிப் போட்டிகளிலிருந்து, ஐக்கிய அமெரிக்காவின் சிமோன் பைல்ஸ் விலகியுள்ளார்.

> **தரைக்கு மேலே இருக்கும்போது எங்கிருப்பது என்பது தெரியாமல் தடுமாறுவதால் பாதிக்கப்படுவதாக பைல்ஸ் தெரிவித்துள்ளார்**

தரைக்கு மேலே இருக்கும்போது எங்கிருப்பது என்பது தெரியாமல் தடுமாறுவதால் பாதிக்கப்படுவதாக பைல்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நாளை (03) இடம்பெறவுள்ள பீம் இறுதிப் போட்டியில் போட்டியிட எதிர்பார்ப்பதாக பைல்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக அணிப் போட்டிகளில் இடையில் விலகியதையடுத்து, ஓல்ட் ரவுண்ட், பார்ஸ், வோல்ட் போட்டிகளிலிருந்தும் பைல்ஸ் விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### டோக்கியோ 2020: ஆண்களுக்கான கால்பந்தாட்டத்தில்

# அரையிறுதியில் பிரேஸில், ஸ்பெய்ன், மெக்ஸிக்கோ


ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளில், ஆண்களுக்கான கால்பந்தாட்டத்தின் அரையிறுதிப் போட்டிகளுக்கு நடப்புச் சம்பியன்களான பிரேஸில், ஸ்பெய்ன், மெக்ஸிக்கோ, ஜப்பான் ஆகியன தகுதி பெற்றுள்ளன.

மத்தெயெஸ் குனியா பெற்ற கோலுடன் எகிப்துடனான காலிறுதிப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே அரையிறுதிப் போட்டிக்கு பிரேஸில் தகுதி பெற்றிருந்தது.

இந்நிலையில், ஐவரிகோஸ்டை 5-2 என்ற கோல் கணக்கில் மேலதிக நேரத்தில் வென்று அரையிறுதிப் போட்டிக்குக்கு ஸ்பெய்ன் தகுதி பெற்றிருந்தது. வழமையான நேரத்தில் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் போட்டி காணப்பட்டிருந்தது. அப்போது ஸ்பெய்ன் சார்பாக, டனி ஒல்மோ, ராஃபா மிர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்ததோடு, ஐவரிகோஸ்ட் சார்பாக, எரிக் பெய்லி, மக்ஸ் கிரடெல் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்தனர். மேலதிக நேரத்தில், மிர் மேலும் இரண்டு கோல்களையும், மிகேல் ஓயர்ஸபல் ஒரு கோலையும் பெற்றிருந்தனர்.

இதேவேளை, மற்றைய காலிறுதிப் போட்டிகளில், தென் கொரியாவை 6-3 என்ற கோல் கணக்கில் வென்று மெக்ஸிக்கோவும், நியூசிலாந்தை 4-2 என்ற ரீதியில் பெனால்டியில் வென்று ஜப்பானின் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தன.





### இரண்டாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில்

# மேற்கிந்தியத் தீவுகளை வென்றது பாகிஸ்தான்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில் பாகிஸ்தான் வென்றது. நான்கு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் முடிவேதும் பெறப்படாத நிலையில், பார்படோஸில் நேற்று முன்தினமிரவு (31) நடைபெற்ற குறித்த போட்டியில் ஏழு ஓட்டங்களால் பாகிஸ்தான் வென்றிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

பாகிஸ்தான்: 157/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 51 (40), மொஹமட் றிஸ்வான் 46 (36), ஷர்ஜீல் கான் 20 (16), பக்கர் ஸமன் 15 (11) பந்துவீச்சு: ஜேஸன் ஹோல்டர் 4/26 [4], டுவைன் பிராவோ 2/24 [4], ஹெய்டன் வோல்ஷ்

மே. தீவுகள்: 150/4 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: நிக்கலஸ் பூரான் ஆ.இ 62 (33), எவின் லூயிஸ் 35 (33), ஷிம்ரோன் ஹெட்மயர் 17 (18), கிறிஸ் கெய்ல் 16 (20) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் ஹபீஸ் 1/6 [4], ஷடாப் கான் 0/22 [4], ஹஸன் அலி 1/32 [4]) போட்டியின் நாயகன்: மொஹமட் ஹஃபீஸ்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 02 ஒகஸ்ட் 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.